
வானவில்

VAANAVIL

இதழ் - 74
மாசி 2017

ISSUE - 74
FEBRUARY 2017

# புதிய அரசியலமைப்பு ஜே.ஆரினதை விட மோசமாக இருக்கப் போகிறது!




மாகாண சபைகளை கலைக்க அல்லது அவற்றின் அதிகாரங்களை மீளப்பெற மத்திய அரசுக்கு அதிகாரம் உள்ளது என்ற விடயத்தில் அரசியலமைப்புச் சபையின் வழிப்படுத்தல் குழு இணக்கம் தெரிவித்திருக்கிறது என அரசியலமைப்புச் சட்டத்தரணியும், ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான ஜயம்பதி விக்கிரமரத்ன தெரிவித்திருக்கிறார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய விக்கிரமரத்ன, நாட்டின் ஐக்கியம், ஆட்புல ஒருமைப்பாடு மற்றும் நாட்டின் சுதந்திரம் என்பனவற்றுக்கு எதிராக செயற்படும் எந்தவொரு மாகாண சபையையும் கலைப்பதற்கோ அல்லது அதனது அதிகாரங்களை மீளப் பெறுவதற்கோ மத்திய அரசுக்கு அதிகாரம் அளிக்கும் யோசனையொன்றை புதிய அரசியல் அமைப்பில் உள்ளடக்குவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

தற்போதைய அரசியல் அமைப்பில் இம்மாதிரியான ஏற்பாடு இல்லையெனச் சுட்டிக்காட்டிய விக்கிரமரத்ன, இந்த யோசனையை தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் வரவேற்றிருப்பதாகக் கூறியுள்ளார்.

ஜயம்பதி விக்கிரமரத்ன அரசியல் அமைப்பு சம்பந்தமான விவகாரங்களில் நிபுணத்துவம் உள்ளவர் எனப் பலராலும் கருதப்படுபவர். மகிந்த ஆட்சிக் காலத்து சர்வகட்சிக் கலந்தாலோசனைக் கூட்டங்களில் சிறுபான்மை இனங்களின் உரிமைகளுக்காக வாதாடியவர். நீண்டகாலமாக லங்கா சமசமாஜக் கட்சியின் தலைமைப் பதவியில் அங்கம் வகித்த அவர், கடந்த பொதுத் தேர்தலின் போது தனது இடதுசாரிக் கொள்கைகளை மூட்டைகட்டி வைத்துவிட்டு, படு பிற்போக்கான ஏகாதிபத்திய சார்பு வலதுசாரிக் கட்சியான ஐ.தே.க. மூலம் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரானார்.

அதன் பின்னர் 'பன்றியோடு சேர்ந்த பசுக்கன்றும் என்னவோ செய்யும்' என்பது போல விக்கிரமரத்னவின் போக்கும் ஐ.தே.கவின் வலதுசாரி - இனவாதக் கொள்கைகளின் பக்கம் சாயத் தொடங்கியது. இப்பொழுது அவரே அதிகாரப் பகிர்வுக்கு எதிரான கருத்துக்களை ஐ.தே.க. சார்பாகப் பேச ஆரம்பித்துவிட்டார்.

அவரைச் சொல்லிக் குற்றம் இல்லை. இனம் இனத்தையே நாடும். ஆனால் 'தமிழ் மக்களுக்காக அதைச் செய்வோம், இதைச் செய்வோம்' என வாய்ச்சவடால் அடித்த சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசியக்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

# கேப்பாப்புலவு – பிலவு நிலமீட்புப் போராட்டம்

மீண்டுமொரு நிலமீட்பு மக்கள் போராட்டமொன்று ஜனவரி 31ந் திகதியிலிருந்து வன்னி நிலப்பரப்பில் நடந்து கொண்டிருக்கிறது. கடைசியாகக் கிடைத்த தகவல்களின் பிரகாரம், இந்தப் போராட்டத்தில் மக்கள் ஓரளவு வெற்றியுமடைந்திருப்பதாகத் தெரியவருகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த புதுக்குடியிருப்பு நகருக்கு அண்மையாக அமைந்துள்ள கேப்பாப்புலவு, பிலவுக்குடியிருப்பு கிராமங்களைச் சேர்ந்த 84 குடும்பங்களின் காணிகளில் இலங்கை விமானப்படை முகாமொன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் காணிகளில் மீளக்குடியேற அனுமதிக்கக் கோரியே பிலவுக்குடியிருப்பை சேர்ந்த மக்களால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. போராட்டம் ஆரம்பித்து 27 நாட்களின் பின்னர் பிலவுக்குடியிருப்பைச் சேர்ந்த 42 ஏக்கர் காணியை விடுவிப்பதற்கான உத்தரவை ஜனாதிபதி விடுத்துள்ளார். ஆனால் இந்த உத்தரவில் கேப்பாப்புலவு காணிகளை மக்களிடம் மீளளிப்பது சம்பந்தமாக எதுவும் சொல்லப்படவில்லை. இதனால் போராட்டம் இன்னமும் முழுமையாக முடிவுக்குக் கொண்டுவரப்படவில்லை.

வவுனியாவில் நிகழ்ந்த உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் அப்பாவி மக்கள் போராட்ட முனையில் நிறுத்தப்படுவது பற்றி சென்ற இதழில் எழுதியிருந்தோம். இந்த இரண்டு போராட்டங்களுமே யுத்தத்திற்கு பின்னரான தீர்க்கப்படாத மக்களின் பிரச்சனைகளை அடியொற்றியது. அத்தோடு இரண்டு போராட்டங்களுக்குமே ஆதரவுக் குரல்கள் பலமாக ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் ஒலித்தன. ஆனால் வெறும் 4 நாட்களில் முடிவுற்ற வவுனியாப் போராட்டம் போலன்றி இது 4 வாரங்களுக்கு மேலாகத் தொடர்கின்றதாகத் தெரிகின்றது.

இலங்கை உள்நாட்டு யுத்தத்தின் விளைவாக வடக்குக் கிழக்கில் வாழ்ந்த மக்களின் காணிகளில், வீடுகளில் மற்றும் பாடசாலைகளில் இலங்கை அரச படையினர் முகாமிட்டிருந்தது எல்லோருக்கும் தெரிந்ததே. இதில் பெரும்பகுதிகளிலிருந்து படையினர் வெளியேறிவிட்டனர். எனினும் யாழ் குடாநாட்டிலும் வன்னி நிலப்பரப்பிலும் படையினரால் விடுவிக்கப்படாத மக்களின் நிலங்கள் உள்ளன. குடியிருக்க வேறு நிலங்கள் இல்லாதவர்களுக்கும் விவசாயத்தையே பெருமளவில் நம்பியிருக்கும் வன்னி மக்களுக்கும் சொந்த நிலம் என்பது அடிப்படையான விடயம். எனவே கடந்த காலங்களில் இந்த நிலங்களை மீளளிக்கக்கோரி மக்கள் பல போராட்டங்களை நடாத்தியுள்ளனர். ஆனால் பிலவுக்குடியிருப்பு மக்களின் தொடர்ச்சியான போராட்டம் இலங்கையில் மாத்திரமல்ல புலம்பெயர் தேசங்களிலும் பலரின் கவனத்தை ஈர்த்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த்தேசியவாத சக்திகளின் பின்னணி பற்றி சரிவரத் தெரியாவிடினும், தமிழ்த்தேசியக் கூட்மைப்புத் தலைவர் இரா.சம்பந்தனும் மற்றும் சில தமிழ்த்தேசியக் கூட்மைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதியுடன் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்திய பின்னரே படையினர் காணிகளிலிருந்து வெளியேறும் அறிவிப்பு வெளியானது. இந்தச் 'சந்திப்பு' நிகழுவதற்கு மக்கள் பகல் வெயிலிலும் மழையிலும் இரவுப்பனியிலும் 27 நாட்கள் போராட வேண்டியிருந்ததா? அல்லது எதிர்க்கட்சியும் ஆளுங்கட்சிகளில் ஒன்றாக இருந்து 'நல்லாட்சி' புரியும் ஒரு நாட்டில் நடக்கும் அரசியல் சித்து விளையாட்டுகளில் இதுவும் ஒன்றா? அதாவது 'போராடும் மக்களுக்காக நாங்கள் கதைக்கிற மாதிரிக் கதைக்கிறம், நீங்கள் இணங்கியதாக படையினருக்கு உத்தரவு பிறப்பியுங்கள்' என்ற அரசியலில் இரு தரப்பினரும் மக்களிடம் நல்ல பெயர் சம்பாதிக்கலாமல்லவா?

வன்னி நிலப்பரப்பில் வாழ்ந்த மக்களே 2009 ஆண்டில் முள்ளிவாய்க்காலில் முடிவுக்கு வந்த யுத்தத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள். யுத்தம் முடிவுற்ற பின்னரும் இன்னமும் பல இன்னோரன்ன அவலங்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருப்பதும் இந்த மக்களே. இந்த மக்களிடம் அரச படையினரும் அதிகாரிகளும் பாலியல் இலஞ்சம் கோருகின்றனரென்று முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய ஆட்சியாளர்களில் ஒருவருமாகிய சந்திரிக குமாரதுங்க கூறியதாக அண்மையில் ஒரு செய்தி பரபரப்பாக வெளிவந்தது. வன்னி யுத்தத்தில் அரச படையினரால் போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் குற்றச்சாட்டுகளுக்கு சந்திரிகவின் கூற்று வலுச்சேர்க்கலாம் என்ற நிலை எழுந்தவுடன், சந்திரிக அப்படிக் கூறவில்லையென செய்தி வெளியாகி சில நாட்களின் பின்னர் மறுக்கப்பட்டது. ஆனால் இதைப்பற்றி இந்த மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகள் எவருமே மூச்சும் விடவில்லை. இந்த அரசியல்வாதிகள் இந்தச் செய்தியில் உண்மையில்லையென மறுத்திருக்க வேண்டும் அல்லது செய்தியின் உண்மைத்தன்மை தொடர்பாக விசாரணைக்கு கோரிக்கை விடுத்திருக்க வேண்டும். இவர்கள் இதுவரையில் இரண்டையுமே செய்யவில்லை.

தமிழர்களுக்கென தனிநாடு வேண்டுமென்ற தவறான ஆயுதப்போராட்டத்தின் விளைவே, இன்று இலங்கை அரச படைகள் வடக்குக் கிழக்கில் மக்களின் நிலங்களில் புதிய முகாம்களை அமைக்க வழிகோலியது. ஆயதப்போராட்டம் தோல்வியில் முடிந்ததால், அரச படையினரின் கைகள் ஓங்கியுள்ளன. இந்த உண்மைகளை கவனத்தில் கொண்டே நிலமீட்புக்கான போராட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும்.

**வானவில்**

தொடர்பு மின்னஞ்சல் முகவரி: sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

இணையத்தளம்: http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.

# தோழர் விசுவானந்ததேவன் மீதான கௌரவமும் அகௌரவமும்!

இலங்கையின் வடமராட்சி கல்லுவம் கிராமத்தைத் தமது பிறப்பிடமாகக் கொண்டவரும், ஆனால் அதேநேரத்தில் இலங்கைத் தேசியவாதியாகவும், கம்யூனிஸ்ட்டுகளுக்கே உரிய சர்வதேசியவாதியாகவும் வாழ்ந்து, சுமார் 30 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலிருந்து தமிழகம் நோக்கிய பயணத்தை தமது சக தோழருடனும் சில பொதுமக்களுடனும் மேற்கொண்டிருக்கையில் காணாமல் போன தோழர் விசுவலிங்கம் விசுவானந்ததேவன் அவர்களை நினைவு கூருமுகமாக 290 பக்கங்களில் நூல் ஒன்று வெளியாகி இருக்கிறது.


இந்த நூலில் பல்கலைக்கழக பேராசிரியர்கள் முதல் பாமர மகன் வரையிலான 25 பேர் தோழர் விசுவானந்ததேவன் பற்றிய தமது அனுபவங்களையும், பார்வைகளையும் பதிவு செய்திருக்கிறார்கள். அவர்கள் தமது கட்டுரைகளின் ஊடாக கடந்தகால, நிகழ்கால அரசியல் நிகழ்வுகளையும், போக்குகளையும், கருத்துகளையும் கூட முன்வைத்திருக்கிறார்கள்.

காலம் பிந்தியாயினும் ஒரு தனிமனிதனின் புகழ்பாடும் வரலாறாக அல்லாமல், ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தின் வரலாற்று ஆவணமாக இந்த நூல் வந்திருப்பது அண்மைக்கால தமிழரின் வரலாற்றில் ஒரு மைல் கல் என்றுதான் கூற வேண்டும். இந்த முயற்சியை சாத்தியமாக்குவதில் இந்த நூல் வெளியீட்டுக்குழு பெரும் சாதனை ஒன்றை நிகழ்த்தியிருக்கிறது. சுமார் ஒரு வருட காலத்துக்கும் மேலாக அயராது உழைத்தே இது சாத்தியமாக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக நூல் வெளியீட்டுக்குழு சார்பாக அயராது உழைத்த நெதர்லாந்தில் வதியும் தோழர் பா.பாலசூரியன் அவர்களின் அர்ப்பணிப்பு இல்லாவிட்டால் இந்த நூல் வெளிவந்திருக்கச் சாத்தியமில்லை என்று துணிந்து கூறலாம். அவர் தனது நேரம் முழுவதையும் அர்ப்பணித்துச் செயற்பட்டதுமல்லாமல், தனது சொந்தப் பணத்தையும் போட்டு இந்த நூலை வெளிக் கொணர்ந்துள்ளார்.

நூல் வெளிவந்துவிட்டது என்று கேள்விப்பட்டவுடனேயே அதைப் பார்த்துப் படித்துவிடத் துடித்த நெஞ்சங்களின் தொகையும், துடிப்பும் அளவிட முடியாதது. அதன் காரணமாக சொற்ப நாட்களிலேயே பிரதிகள் அனைத்தும் விற்றுத் தீர்ந்ததுடன், பிரதி கிடைக்காத பலர் இன்றும் அதற்காக முயன்று கொண்டிருப்பதையும் காண முடிகிறது. அதன் காரணமாக இரண்டாவது பதிப்பு ஒன்றை வெளியிடுவது பற்றிய ஆலோசனையும் வெளியீட்டுக்குழுவின் சிந்தனையில் உள்ளது.

## தோழர் மணியம்

தோழர் விசுவானந்ததேவன் குறித்த இந்த நினைவு நூலின் வெளியீட்டு விழாக்களும் சில நடந்து முடிந்துள்ளன. முதலாவது வெளியீட்டு விழா தமிழ் ஆயுதப் போராட்ட இயக்கங்கள் முளை விடுவதற்கு முன்னர் புரட்சிகர கம்யூனிஸ்ட்டுகளின் 'கோட்டை'யாகத் திகழ்ந்த கிளிநொச்சி மண்ணில் நடைபெற்றது. இரண்டாவது வெளியீட்டு விழா புலம்பெயர் தமிழர்கள் ஆகக்கூடுதலாக வாழும் கனடிய மண்ணில் நிகழ்ந்தது. இந்த விழாவில் அண்மைக்கால கனடிய வரலாற்றில் காண முடியாத அளவு பெருந்தொகையான மாற்றுக் கருத்துள்ள மக்கள் கருத்து வேறுபாடுகளைக் கடந்து கலந்து கொண்டதன் மூலம், தோழர் விசுவானந்ததேவன் மீதான பற்றுதலை வெளிப்படுத்தியதுடன், புதிய அரசியல் கலாச்சாரம் ஒன்றையும் வெளிப்படுத்தினர். மூன்றாவது வெளியீட்டு விழா யாழ்ப்பாண நகரத்தில் நடைபெற்றது. இன்னும் சில வெளியீட்டு விழாக்கள்



புலம்பெயர் தமிழர்கள் வாழும் நாடுகளில் நடைபெறவுள்ளன.

இந்த வெளியீட்டு விழாக்கள் ஒரு உண்மையை எடுத்துக் காட்டியுள்ளன. அதாவது ஒரு மனிதன் மரணித்து எவ்வளவு காலமானாலும், அவன் மக்களுக்காக வாழ்ந்து மரணித்திருந்தால் அவனை மக்கள் ஒருபோதும் மறக்கார் என்ற உண்மையே அது. அந்த உண்மையை ஒரு உண்மைக் கம்யூனிஸ்ட்டாக வாழ்ந்து மரணித்த தோழர் விசுவானந்ததேவனின் நினைவு நூல் வெளியீட்டு விழாக்களில் அவதானிக்க முடிந்தது.

மறுபக்கத்தில் தோழர் விசுவானந்ததேவன் அவர்களின் கீர்த்தியை மக்கள் இவ்வளவு தூரம் மதித்த அதேவேளையில், வழமைபோல சில அரசியல் சந்தர்ப்பவாதிகள் அவருக்கு சேறு பூசவும் தவறவில்லை. தாமும் எதனையும் செய்யார், மற்றவர்கள் செய்வதிலும் ஏதாவது நொட்டை சொல்வார் என்ற ஒரு குற்றச்சாட்டு நமது தமிழ் சமூகம் மீது நீண்டகாலமாக முன்வைக்கப்பட்டு வருவதை பலரும் அறிவர்.

அந்த வகையில் இத்தகையவர்களால் இன்னும்

பலரின் கட்டுரைகளை இந்த நூலில் இடம்பெற வைத்திருக்கலாம் என்ற விமர்சனம் இந்த நூல் வெளியீட்டாளர்கள் மீது வைக்கப்படுகிறது. எனவே இது பற்றிய உண்மைகளை தெரிவிப்பது அவசியம்.

முதலாவது விடயம் கட்டுரை கேட்டு அணுகப்பட்டவர்களின் தொகை ஏறத்தாழ 50 பேர். இவர்களில் சிலர் கட்டுரை தருவதாக கடைசி வரை வாக்குறுதி அளித்துவிட்டு தராமலேயே இருந்துவிட்டனர். ஒரு சிலர் நேர்மையாக கட்டுரை தர விரும்பவில்லை எனத் தெரிவித்துவிட்டனர். வேறு சிலர் கட்டுரை கேட்டு எழுதிய கடிதத்திற்கு பதில் அளிக்காமலே பூடகமாக இருந்து கொண்டனர். வேறு சிலரிடம் கட்டுரை வாங்குவதில்லை என வெளியீட்டுக்குழுவே தீரமானித்துக் கொண்டது. வேறு சிலர் தவறுதலாக விடப்பட்டும் உள்ளனர் என்பதையும் ஏற்கத்தான் வேண்டும்.

ஒரு சிலரிடம் கட்டுரை கேட்காததிற்குக் காரணத்தையும் சொல்லிவிட வேண்டும். அத்தகையவர்கள் ஒரு காலத்தில் தோழர் விசுவானந்ததேவனுடன் இணைந்து வேலை செய்தவர்கள்தான். அதை மறுப்பதற்கில்லை. ஆனால் அத்தகையவர்கள் தோழர் விசுவானந்ததேவன் என்ன நோக்கத்துக்காக தமிழீழ தேசிய விடுதலை முன்னணியை (NLFT) உருவாக்கினாரோ அந்த நோக்கத்தை இரு தடவைகள் தடம் புரளச் செய்தவர்கள். முதலில் அவர்கள் அதிதீவிர இடதுசாரித்துவம் பேசி தமிழ் தேசிய இனப் பிரச்சினையிலிருந்து இயக்கத்தை திசை திருப்பிவிட முயன்றனர். பின்னர் 180 பாகை பல்டி அடித்து மார்க்சிய நோக்கிலிருந்து விலகிய வெறும் தமிழ் தேசியவாத இயக்கமாக அதை மாற்ற முயன்றனர். அதன் உச்சக் கட்டமாக பாசிச புலிகளுடன் ஐக்கிய முன்னணி அமைக்க வேண்டும் என்ற மிக மோசமான வலது சந்தர்ப்பவாதம் வரை சறுக்கியவர்கள். இன்றும்கூட அதே நிலைப்பாட்டிலேயே உள்ளவர்கள்.

இவையெல்லாவற்றையும் விட தோழர் விசுவானந்ததேவனையும், அவருடன் இணைந்து பணியாற்றிய சில தோழர்களையும் ஒழித்துக்கட்டுவதற்கான சதி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டவர்கள். இன்று நல்ல பிள்ளைகள் போல வேசமிடும் இவர்களிடம் கட்டுரை பெற்றிருந்தால் அது தோழர் விசுவானந்ததேவனுக்கு செய்யும் அவமரியாதையாகவும், துரோகமாகவும் அமைந்திருக்கும். அதன் காரணமாகவே இத்தகையவர்களிடம் கட்டுரை பெறுவதில்லை என வெளியீட்டுக்குழு திட்டவட்டமாகத் தீர்மானித்திருந்தது.

இத்தகையவர்களே "விசுவானந்ததேவனின் நினைவு நூல் வெளியீட்டாளர்கள் உள் நோக்கத்துடன் அவரிடம் கட்டுரை பெறவில்லை, இவரிடம் கட்டுரை பெறவில்லை" என முகநூல்களிலும், ஏனைய சமூக வலைத்தளங்களிலும் புலம்பினர். இன்னும் சிலர் விசுவானந்ததேவனுடன் ஒன்றாகச் சாப்பிட்டேன், ஒன்றாகப் படுத்தேன், அவரை சைக்கிளில் ஏற்றித் திரிந்தேன், அவரது கலியாணத்துக்கு முன் நின்றேன், எனவே எனக்குத்தான் அவர் கூடுதலான உரிமை என்ற கணக்கில் முதுசம் கொண்டாடுகின்றனர். ஆனால் இவர்கள் யாருமே தோழர் விசுவானந்ததேவன் சம்பந்தமாக இந்த 30 வருட காலத்தில் எந்தவொரு நினைவு முயற்சியையும் செய்ய முயற்சிக்கவில்லை என்பதைப் பார்த்தாலே இவர்கள் தோழர் விசுவானந்ததேவன் மீது எத்தகைய பற்றுப்பாசம் கொண்டிருந்தார்கள் என்பது புரியும்.

இது தவிர வேறு சிலர் தோழர் விசுவானந்ததேவனின் ஆத்ம தோழர்கள் என்று கூறிக்கொண்டு அவர் சார்ந்திருந்த இடதுசாரி இயக்கத்தையும், அவர் அசையாது உறுதியுடன் பின்பற்றிய மார்க்சியக் கொள்கைகளையும், மிகவும் கீழ்த்தரமான முறையில் வசைபாடியதையும் கூடக் கண்டோம்.

தோழர் விசுவானந்ததேவன் எங்காவது உயிருடன் வாழ்ந்திருந்து, இத்தகைய வகையில் தன்னைப் பற்றி பெருமை பேசியவர்களையும், சிறுமை பேசியவர்களையும் கண்டிருந்தால், அவருக்கேயுரிய பெருந்தன்மையுடன் தனக்குள் சிரித்துவிட்டு, அவர்கள் எல்லோருடனும் கள்ளம் கபடம் இன்றி அளவளாவியிருப்பாரோ என்னவோ?

# இலங்கைக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் ட்ரம்ப்பினால் நீக்கம்!

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் றம்ப் தமது நாட்டுக்கும் சர்வதேச நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் பல அதிரடி மாற்றங்களைச் செய்து வருகிறார். அதில் மிக முக்கியமானது அமெரிக்காவின் பரம வைரியாக இரண்டாம் உலகப்போர் முதல் இதுவரை காலமும் கருதப்பட்டு வந்த ரஸ்யாவுடன் அவர் உறவுகளை மேம்படுத்த எடுத்துவரும் நடவடிக்கைகளாகும். இன்னொன்று 1972இல் அப்போதைய ஜனாதிபதி நிக்சனால் ஏற்படுத்தப்பட்ட சீனாவுடனான சுமுக உறவுகளை சீரகுலைப்பதற்கு அவர் எடுத்துவரும் நடவடிக்கைகளாகும்.

அதேநேரத்தில் இலங்கை போன்ற சின்னஞ்சிறிய நாடுகளுடனான உறவுகளிலும் ட்ரம்ப் பாரிய மாற்றங்களைச் செய்து வருகிறார். முன்னைய ஒபாமா அரசாங்கம் இலங்கையில் மகிந்த ராஜபக்ச தலைமையிலான ஆட்சியை வீழ்த்தி தற்போதைய தமக்கு விசுவாசமான மைத்திரி – ரணில் அரசைப் பதவிக்குக் கொண்டு வருவதில் ஐ.நா. மனித உரிமைப் பேரவையை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தியது. முன்னைய ஜனாதிபதி மகிந்தவை போர்க்குற்ற விசாரணைக்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் வரை கொண்டு செல்வதற்கான அச்சுறுத்தல் தலைக்கு மேலான வாளாக அப்போது இலங்கை அரசுக்கு மேலாகத் தொங்கிக்

தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க…

# அமெரிக்க – மெக்சிக்கோ தடைச்சுவரின் பின்னணியில்

அமெரிக்காவுக்கும் மெக்சிக்கோவுக்கும் இடையிலான எல்லையின் நீளம் அமெரிக்காவின் கலிபோர்னியாவிலிருந்து ரெக்சாஸ் வரை 2,000 மைல்கள் நீளமுடையதாகும். இந்த எல்லையின் ஊடாகவே பல்லாயிரக்கணக்கான சட்டவிரோதமான குடியேற்றவாசிகள் அமெரிக்காவுக்குள் நுழைவது வழமை.

இந்தக் குடியேற்றவாசிகளைத் தடுப்பதற்காக எல்லைச்சுவர் ஒன்றைக் கட்டும் பணியை அமெரிக்க அரசு போயிங் (Boeing) நிறுவனத்திடமும் வேறு சில நிறுவனங்களிடமும் 2006இல் கையளித்தது. ஆனால் 1 பில்லியன் டொலர்கள் செலவழிக்கப்பட்டு, வெறுமனே 53 மைல்கள் நீளமான சுவர் மட்டுமே கட்டப்படடு, மக்களின் வரிப்பணம் வீணடிக்கப்பட்ட நிலையில் திட்டம் கிடப்பில் போடப்பட்டது. ஒப்பந்தக்காரர்கள் பெரும்தொகைப் பணத்தை வாரிச்சுருட்டியதுதான் மிச்சமானது.

ஆனால் 2017 ஜனவரி 20இல் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற டொனால்ட் றம்ப், தனது தேர்தல் வாக்குறுதியாக அளித்ததிற்கு இணங்க தடைச்சுவர் கட்டும் பணியை உடனடியாக ஆரம்பிக்கும்படி பதவியேற்றவுடனேயே உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்தத் தடைச்சுவரைக் கட்டுவதற்கு 12 முதல் 15 பில்லியன் வரையிலான டொலர்கள் செலவாகும் என அமெரிக்க செனற் சபையின் பெருபான்மைக் குழுத்தலைவர் Mitch McConnel தெரிவித்துள்ளார். ஆனால் M.T.T. என்ற ஆய்வு நிறுவனம் சென்ற வருடம் தெரிவித்த கணிப்பின்படி, 50 அடி உயரமான இரும்பு மற்றும் சிமெந்து கொண்ட 1,000 மைல்கள் நீளமான தடைச்சுவரை எழுப்புவதற்கு 40 பில்லியன் டொலர்கள் செலவாகும் எனத் தெரிவித்துள்ளது.

ஆனால் 2011இல் அமெரிக்காவின் உள்நாட்டுப் பாதுகாப்புத் திணைக்களம், தனது கணிப்பீட்டின் அடிப்படையில் இச்சுவர் நடைமுறைப் பயன்பாடு அற்றதென்றும், அதிக செலவுடையதென்றும் கூறி திட்டத்தைக் கைவிட்டுவிட்டது.




## தவம்

அமெரிக்க அரசு எல்லைப் பாதுகாப்புக்கான செலவாக 2007 முதல் 2012 வரையான காலத்தில் 1.5 பில்லியன் டொலர்களை ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கியுள்ளது. இவ்வாறான ஒப்பந்தங்களால் அதிக பயன் பெறுபவை பல்தேசிய நிறுவனங்களே.

போயிங் நிறுவனம் அமெரிக்க அரசின் ஒப்பந்தங்களைப் பெறும் இரண்டாவது பெரிய நிறுவனமாகும். சென்ற வருட வருடாந்த வரவு செலவு கணக்கின்படி அந்த நிறுவனம் சுமார் 20 பில்லியன் டொலர்கள் பெறுமதியான ஒப்பந்தங்களைப் பெற்றுள்ளது. இதைவிட பல பெரும் நிறுவனங்கள் பலவிதமான அரச ஒப்பந்தங்களைப் பெற்றுள்ளன.

2012ஆம் வருட ஒரு ஆய்வறிக்கையின்படி மேற்படி தடைச்சுவர் கட்டுமானத்தில் வேலை செய்த தொழிலாளர்களில் அரைவாசிப்பேர் முறைப்படி பதியப்படாத தொழிலாளர்களாகும். இதன் கருத்து என்னவெனில், அவர்கள் எல்லோரும் சட்டரீதியற்ற குடியேற்றவாசிகள் என்பதாகும். அமெரிக்கப் பொரளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் இந்த சட்டவிரோதக் குடியேற்றவாசிகளின் பங்கு கணிசமானது என்றபோதிலும், தற்போதைய ஜனாதிபதி அவர்களுக்கு எதிரான கடும் நிலப்பாட்டிலேயே இருக்கிறார்.

இப்படியான ஒரு சூழ்நிலையிலேயே புதிய ஜனாதிபதி றம்ப் தாம் பதவியேற்றவுடன் எல்லைத் தடுப்புச்சுவர் கட்டும் பணியை ஆரம்பிக்கும்படி உடனும் உத்தரவிட்டுள்ளார். அத்துடன் இக்கட்டுமான வேலைக்கான நிதி மெக்சிக்கோவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு விதிக்கப்படும் வரியை 20 சதவீதம் உயர்த்துவதன் மூலம் பெறப்படும் எனவும் அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பு வெளியானதும் அமெரிக்காவுக்கு மேற்கொள்ளவிருந்த விஜயத்தை மெக்சிக்கோ ஜனாதிபதி உடனும் இரத்துச்

செய்துவிட்டார்.

அதுமட்டுமின்றி, அமெரிக்கா, கனடா, மெக்சிக்கோ ஆகிய வட அமெரிக்க நாடுகளுக்கிடையில் செய்யப்பட்ட NAFTA எனப்படும் கூட்டு வியாபார ஒப்பந்தத்தை உலக வரலாற்றிலேயே மிக மோசமான நடவடிக்கை என டொனால்ட் றம்ப் சாடியிருக்கிறார். இதன் காரணமாக மெக்சிக்கோவுடனான உறவுகள் மட்டுமின்றி கனடாவுடனான அமெரிக்க உறவுகளும் ஈடாட்டம் கண்டுள்ளன.

இந்த ஒப்பந்தம் 470 மில்லியன் மக்களையும், 25 றில்லியன் டொலர்கள் பிராந்திய வர்த்தகத்தையும் உள்ளடக்கியதாகும். இதற்கான தீர்வாக மெக்சிக்கோவுக்கு இடம் மாற்றிய கொம்பனிகளின் இறக்குமதித் தீர்வையை 35 சத வீதமாக அதிகரிக்க வேண்டும் என றம்ப் கூறுகிறார். மெக்சிக்கோவில் உள்ள 116இற்கு மேற்பட்ட இயந்திர உற்பத்தி நிறுவனங்கள்தான் கனடாவுக்குத் தேவையான மோட்டார் உதிரிப் பாகங்களை உற்பத்தி செய்கின்றன. றம்ப்பின் நடவடிக்கையால் கனடிய பொருளாதாரமும், கனடியத் தொழிலாளர்களும் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்புள்ளது.

இது ஒருபுறமிருக்க, 12 நாடுகள் கொண்ட 'தூர பசுபிக் பங்காண்மை' (Trans Pasific Partnership) என்ற அமைப்பிலிருந்தும் அமெரிக்கா விலகுவதாக றம்ப் அறிவித்துள்ளார். றம்ப்பின் இந்த ''முட்டாள்தனமான'' நடவடிக்கை அப்பிராந்தியத்தில் ஏற்கெனவே வலுவாகக் கால் ஊன்றியுள்ள சீனாவின் செல்வாக்கை மேலும் அதிகரித்துவிடும் என அமெரிக்காவின் பாரம்பரிய நேச நாடுகள் அச்சம் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில் இன்னொரு பக்கத்தில் அமெரிக்க – சீன உறவுகளும் தடுமாற்றத்திலேயே உள்ளன. அதற்குக் காரணம், அமெரிக்காவுக்கு அடுத்த நிலையில் உள்ள சீனாவின் அபரிமிதமான பொருளாதார வளர்ச்சியே, அமெரிக்காவின் பொருளாதாரப் பின்னடைவுக்குக் காரணம் என றம்ப் நம்புவதே. அவரின் கருத்து என்னவென்றால், சீனா தனது பணத்தின் பெறுமதியைப் பொய்யாகக் கையாள்வதுடன், அமெரிக்க மக்களின் தொழில்களையும் களவாடுகின்றது என்பதாகும். இதனால் றம்ப் சீனாவையே தனது முதலாம் நம்பர் எதிரியாகப் பார்க்கிறார். அநேரத்தில் ரஸ்யாவின் அதிபர் புடினுடன் நட்பாகக் கைகுலுக்க விரும்புகிறார்.

அமெரிக்காவின் சனத்தொகையில் பெரும்பாலானோர் குடியேற்றவாசிகளே. அமெரிக்க மண்ணின் பூர்வகுடி மக்களை வன்முறை மூலம் காலத்துக்காலம் அழித்தே இவர்கள் அந்த மண்ணில் குடியேறினார்கள். ஆனால் அந்த வழிவந்த இன்றைய அமெரிக்க ஆளும் வர்க்கம், தத்தமது நாடுகளில் நிலவும் அசாதாரண நிலைமைகள் காரணமாக தற்பொழுது அமெரிக்காவில் குடியேற வருபவர்களை விரட்டியடிப்பதில் தீவிரமாக இருக்கிறது.

1,800இன் மத்தியில் அயர்லாந்தில் நிலவிய பஞ்சத்தாலும், பிரித்தானிய ஏகாதிபத்திய அரசின் அடக்குமுறையாலும் 1 மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் பலியாக்கப்பட்ட நிலையில், 1 மில்லியனுக்கு மேற்பட்ட இன்னொரு பகுதி மக்கள் கப்பல்கள் ("Coffin Ships") மூலம் அத்திலாந்திச் சமுத்திரத்தைக் கடந்து அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் வந்து குடியேறினார்கள். இதுவே அமெரிக்க மண்ணில் அதிகளவான அகதிகள் வந்தடைந்த முதல் நிகழ்வாகும். அன்று அவ்வாறு வந்த ஐரிஸ் அகதிகளை அமெரிக்க மண் அரவணைத்துக் கொண்டது.

ஆனால் இன்றைய அமெரிக்க ஜனாதிபதி றம்ப், சிரியா போன்ற நாடுகளில் ஏற்பட்டுள்ள உள்நாட்டு யுத்தம் காரணமாக (இந்த யுத்தம் அமெரிக்கா போன்ற மேற்கத்தைய நாடுகளாலேயே உருவாக்கப்பட்டது) அமெரிக்காவிடம் புகலிடம் கோரி வருகின்ற ஏறத்தாழ 134 மில்லியனுக்கும் மேற்பட்ட முஸ்லீம் மக்களின் வருகையைத் தற்காலிகமாகத் தடை செய்துள்ளார். இது வெளிப்படையில் மத வெறுப்பு நடவடிக்கை போலத் தோன்றினாலும் அடிப்படையில் ஒரு இனவெறி நடவடிக்கையாகும்.

ஆனால் இவ்வாறு அமெரிக்காவுக்குள் நுழையத் தடை விதிக்கப்பட்ட ஏழு முஸ்லீம் நாடுகளின் பிரசைகளில் எவராவது அமெரிக்க மண்ணில் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்கான சான்றுகள் எதுவுமில்லை.

ஆனால் அமெரிக்காவில் நிகழ்த்தப்பட்ட 9/11 தாக்குதலில் 2,300 அமெரிக்க மக்கள் சாவடைவதற்குக் காரணமாக இருந்தவர்களில் 14இற்கு மேற்பட்டோர் சவூதி அரேபியப் பிரசைகளாகும். இதேபோல டிசம்பர் 02, 2015ல் San Bernardino இல் நடைபெற்ற மதவெறிச் சூட்டில் 14 பொதுமக்கள் கொல்லப்படக் காரணமாக இருந்த கணவனும் மனைவியும் கூட சவூதி அரேபியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் பின்னணியைச் சேர்ந்தவர்கள்தான்.

அமெரிக்க அரசின் இரட்டை வேடத்தைத் தெரிந்து கொள்ள வேறு சில விடயங்களையும் கூறலாம்.

9/11 தாக்குதல் சம்பவம் நடைபெற்ற போது அப்போதைய ஜனாதிபதி ஜோர்ஜ் புஸ்சின் அரசு சகல விதமான விமானப் பறப்புகளையும் அமெரிக்காவில் தடை செய்தது. அதேநேரத்தில் சவூதி அரேபியாவைச் சேர்ந்த அரச குடும்பத்தினரும், பெரும் பணக்காரர்களுமான 100 பேர் வரை அமெரிக்காவை விட்டுப் பாதுகாப்பாக வெளியேறுவதற்கு தனி விமானத்தை ஒழுங்கு செய்தது.

இன்னொரு விடயம், அமெரிக்க – மெக்சிக்கோ எல்லையில் தடைச்சுவர் கட்டும் விடயமாகும். இரண்டாம் உலக காலகட்டத்தில் நாஜிகளின் தலைவனான சர்வாதிகாரி ஹிட்லரின் உலகைக் கபளீகரம் செய்யும் திட்டத்தை முறியடித்த ஸ்டாலின் தலைமையிலான சோசலிச சோவியத் யூனியனின் வீரமிகு செஞ்சேனை, ஜேர்மனியின் கிழக்குப் பகுதியை விடுதலை செய்து, முதலாளித்துவ மேற்கு ஜேர்மனி கிழக்குப் பகுதி மக்களை அடக்குமுறை செய்யவோ, சுரண்டவோ முடியாதபடி தடைச்சுவர் ஒன்றை எழுப்பியது.

இந்தத் தடைச்சுவரைத் தகர்த்து மீண்டும் கிழக்கு ஜேர்மனி மக்களை அடிமைப்படுத்துவதற்கு மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவ சக்திகள் எடுத்த அத்தனை முயற்சிகளும் தோல்வியில் முடிந்தன. ஆனால் பின்னர் சோவியத் யூனியனில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய கோபர்சேவ்

என்ற துரோகியால் அது சாத்தியமாக்கப்பட்டது. அதன் மூலம் கிழக்கு ஜேர்மனி மக்கள் மீண்டும் சுரண்டலுக்குள்ளும், வேலையில்லாத் திண்டாட்டத்திற்குள்ளும், வறுமைக்குள்ளும் தள்ளப்பட்டனர்.

இதில் உள்ள முக்கியமான விடயம் என்னவெனில், 1990களில் ஜேர்மன் சுவர் இடிக்கப்பட்டதைக் கொண்டாடிய அமெரிக்கா, இன்று தென் அமெரிக்கர்கள் தனது நாட்டுக்குள் வரக்கூடாது என்று சொல்லி, தனது நாட்டுக்கும் மெக்சிக்கோவுக்கும் இடையில் தடைச்சுவர் எழுப்ப முனைவதுதான். இதிலிருந்து அமெரிக்கா போன்ற ஏகாதிபத்திய நாடுகள் தமது இலாபத்துக்காக ஒவ்வொரு விடயத்திலும் எப்படி இரட்டை வேடம் போடுகின்றன என்பது புலனாகும்.

இந்தத் தடுப்புச்சுவர் விடயம் பற்றிக் கூறும்போது மேலும் சில விடயங்களையும் நாம் அவதானிக்கலாம். அதாவது, 1990களிலேயே 15இற்கு மேற்பட்ட தடுப்புச் சுவர்கள் உருவாகிவிட்டன. இதில் பிரபலமானது இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் இஸ்ரேலால் உருவாக்கப்பட்ட தடுப்புச்சுவர் ஆகும். கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் நாடுகளுக்கிடையே 25இற்கு மேற்பட்ட தடுப்புச்சுவர்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

'அரபு வசந்தம்' (Arab Spring) என்ற பெயரில் மத்திய கிழக்கில் ஏகாதிபத்தியத்தால் உருவாக்கப்பட்ட பொய்யான, கபட நோக்கம் கொண்ட, தற்காலிக மக்கள் கிளர்ச்சிகளின் பின்னர், மத்திய கிழக்கில் மாத்திரம் 2016 ஒக்ரோபர் வரை 70 எல்லைத் தடுப்புச்சுவர்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவை தவிர அண்மைக் காலங்களில் மேலும் சில தடுப்புச்சுவர்கள் கட்டப்பட்டுள்ளன. அவற்றில் சில வருமாறு:

- 2015இல் கங்கேரி, சேர்பியா மற்றும் கொராத்தியா என்பனவற்றுக்கிடையே கட்டப்பட்ட சுவர்.
- இதேகாலத்தில் பல்கேரிய தடுப்புச்சுவர் கட்டப்பட்டு, 2016 இல் மேலும் நீட்டப்பட்டது.
- பிரித்தானியா, பிரான்சின் துறைமுக நகரான Calais இல் அகதிகளின் வருகையைத் தடுப்பதற்கு 4 மீட்டர் உயரமான சுவர் கட்டுவதற்கு நிதி வழங்கியுள்ளது.
- அண்மையில் நோர்வே ரஸ்யாவுடனான ஆர்க்டிக் எல்லையில் 24 மீட்டர் உயரமான சுவரைக் கட்ட ஆரம்பிதுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் ரம்பின் எதிர்பாராத வெற்றியால், ஐரோப்பாவிலும் பல இனவாத, மதவாத, அதிதீவிர வலதுசாரிச் சக்திகள் தலைதூக்க ஆரம்பித்துள்ளன. உதாரணமாக, பிரான்சில் தேசிய முன்னணி (National Front), பிரித்தானியாவில் சுதந்திரக் கட்சி (Independent Party), ஜேர்மனியில் குடியேற்றவாசிகளுக்கு எதிரான மாற்றீட்டுக் கட்சி (Anti-Immigrant Alternative for Germany), நெதர்லாந்தில் சுதந்திரத்துக்கான கட்சி (Party for Freedom), மற்றும் ஆஸ்திரியாவில் ஆஸ்திரிய சுதந்திரக் கட்சி (Freedom Party of Austria) போன்ற தீவிர வலதுசாரிக் கட்சிகள் அண்மைக்காலக் கருத்துக் கணிப்புகளில் முன்னணியில் நிற்கின்றன.

உலகம் முழுவதும் ஏற்பட்டு வரும் இந்த வலதுசாரிச் சக்திகளின் மீள் எழுச்சி ஒருபக்கத்தில் மீண்டும் பாசிசம் தோன்றுவதற்கான சூழலையும் அதன் காரணமாக உலக யுத்தம் ஒன்று ஏற்படுவதற்கான அபாயத்தையும் எடுத்துக் காட்டுவதுடன், முதலாளித்துவ சமூக அமைப்பு என்றுமில்லாத வகையில் நெருக்கடியில் சிக்கியுள்ளதன் வெளிப்பாடாகவும் இருக்கின்றது.

**4ம் பக்கத்தொடர்ச்சி...**

இந்த நடவடிக்கைகளுக்காக ஒபாமா நிர்வாகம் தேர்ந்தெடுத்த சில இராஜதந்திரிகளைப் பயன்படுத்தி வந்தது. அதில் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராகத் தீவிரமாகச் செயல்பட்ட அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தைச் சேர்ந்த நான்கு அதிகாரிகளை ஜனாதிபதி ட்ரம்ப் தற்போது பதவி நீக்கம் செய்துள்ளார்.

அதுமாத்திரமின்றி, அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான உதவி இராஜாங்க செயலாளர் பதவியிலிருந்து நிசா பிஸ்வாலையும், அமெரிக்காவின் ஐ.நாவுக்கான தூதுவர் பதவியிலிருந்து சமந்தா பவரையும் கூட ட்ரம்ப் பதவி நீக்கம் செய்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்கள் இருவரும் *2015* ஜனவரியில் மைத்தரி – ரணில் ஆட்சிக்கு வந்தபின்னர் அடிக்கடி இலங்கைக்கு விஜயம் செய்து இலங்கை அரசுடன் நெருங்கி செயல்பட்டு வந்தவர்கள் ஆவர். குறிப்பாக சமந்த பவர் தற்போதைய இலங்கை வெளிவிவகார அமைச்சரை வழிநடாத்தும் அளவுக்குச் செல்வாக்குப் பெற்றிருந்தார் என விமர்சிக்கப்பட்டவராவார்.

ட்ரம்ப்பின் இந்த மாற்றங்கள் இலங்கை அரசு போர்க் குற்றச்சாட்டுகளிலிருந்து தப்பி நிம்மதிப் பெருமூச்சு விடுவதற்கு வழிசமைத்துள்ளது எனலாம்.

– ***கருணா***

புதியதோர் உலகம்
செய்வோம் – கெட்ட

போரிடும் உலகத்தை
வேரோடு சாய்ப்போம்

பொதுஉடைமைக்
கொள்கை திசை எட்டும்
சேர்ப்போம்

புனிதமோடு அதை எங்கள்
உயிர் என்று காப்போம்

இதயம் எலாம் அன்பு
நதியினில் நனைப்போம்

இது எனது என்னும் ஓர்
கொடுமையைத் தவிர்ப்போம்

**– பாரதிதாசன்**

# பெண்கள் பற்றி பாரதி!

“பாரதியார் ஒரு புதுமைப் பித்தர். பெண்கள் பர்தா அணியும் வழக்கம் அவருக்குப் பிடிக்காது. ஆனால், பெண்கள் வரம்பு மீறி நாகரிகமென்று சொல்லிக்கொண்டு நடப்பதும் பிடிக்காது.

‘வீட்டில் பெண்களைப் பூட்டி வைப்பதால் பிரயோஜனமில்லை. பெண்கள், மனதில் களங்கமின்றி ஆண்மக்களோடு பழக வேண்டும். அங்ஙனமே ஆடவர்களும் ஸ்திரீகளின் மத்தியில் உள்ளத்தில் மாசின்றி உறவாட வேண்டும். இப்படி ஜாக்கிரதையுடன் சிறிது காலம் நடந்தால், தனியே ஒவ்வொருவர் மனமும் பரிசுத்தமாகிவிடும். மூடி மூடி வைப்பதால் புருசர்களுக்கு பெண்களைப் பார்ப்பதில் ஆசை அதிகமாகி வரம்பு மீறவும் ஏது உண்டாகிறது’ என்ற கொள்கை உடையவர் பாரதியார்.

பெண்கள் யாருக்கும் அஞ்சித் தலையைக் கவிழ்க்கக்கூடாது. ‘யாரேனும் விடர்கள் கெட்ட ஹிருதயத்தோடு உன்னை நோக்கினால், நீ அவனை தைரியமாக பத்து நிமிடம் உற்றுப்பார். அவன் வெட்கித் தலைகுனிந்துவிடுவான். அல்லது அவன் முகத்தில் திடீரென்று உமிழ்ந்துவிட்டு அப்பால் செல்’ என்று குழந்தைகளுக்கு உபதேசம் செய்வார்”.

*மக்கள் கவிஞன் பாரதியின் துணைவியார் செல்லம்மா எழுதிய ‘பாரதியார் சரித்திரம்’ என்ற நூலிலிருந்து*

## டாவின்சி ஓவியத்தின் பெறுமதி!

உலகப் புகழ்வாய்ந்த ஓவியர் லியோனார்டோ டா வின்சியின் (Leonardo da Vinci) முன்னர் கண்டு பிடிக்கப்படாத ஓவிய வரைவு ஒன்றுக்கு (Sketch of the Martyred St.Sebestian), ஏல விற்பனை நிலையம் ஒன்று 15.8 மில்லியன் அமெரிக்க




டொலர்கள் விலைப் பெறுமதியைத் தீர்மானித்துள்ளது.

## சவூதி பெண்ணுக்கு நேர்ந்த கதி!

சவூதிய அரேபியாவில் மேற்கத்தைய உடை அணிந்து தனது படத்தை ருவிற்ரரில் பதிவேற்றம் செய்த பெண் ஒருவரை அந்நாட்டுப் பொலிசார் கைது செய்துள்ளனர். சவூதியில் பெண்கள் பகிரங்க இடங்களில் தமது உடலை முழுமையாக மறைத்து இருக்க வேண்டும் என்ற கடுமையான சட்டம் இருப்பதே இதற்குக் காரணம்.

## உலகின் வயது முதிர்ந்த கொரில்லா மரணம்!

உலகின் மிக வயது முதிர்ந்த மனிதக் குரங்கான “Colo” என்ற பெயருள்ள கொரில்லா (Gorilla) தனது 60ஆவது வயதில் அமெரிக்காவின் ஓகியோ மாகாணத்தில் உள்ள கொலம்பஸ் மிருகக்காட்சிச்சாலையில் 2017 ஜனவரி 17ஆம் திகதி மரணம் அடைந்துள்ளது. 1956 டிசம்பர் 22இல் பிறந்த இது மிருகக்காட்சிச்சாலையிலேயே பிறந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## உலகின் மிகப் பழைய சமையல் கலை புத்தகம்!

உலகின் மிகப் பழமையான சமையல் கலைப் புத்தகமொன்றை யேல் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். இந்தச் சமையல் புத்தகம் மூன்று களிமண் பலகைகளில் எழுதப்பட்டுள்ளது.

மூன்றிலும் மொத்தம் 35 வகையான சமையல் குறிப்புகள் உள்ளன. இவை பழைய பாபிலோனிய காலத்தின் இடைப்பகுதியில் எழுதப்பட்டவையாகும். இந்த சமையல் கலைப் புத்தகம் சுமார் 3,700 ஆண்டுகளுக்கு எழுதப்பட்டது என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

## ‘ரைட்டானிக்’ பற்றிய புதிய தகவல்!

உலகப் பிரசித்தி பெற்ற ரைட்டானிக் (Titanic) கப்பல் 1912இல் பனிப்பாறை ஒன்றுடன் மோதி உடைந்து கடலுக்குள் அமிழ்ந்து போனதில்அதில் பயணம் செய்த 1,500 பேர் பரிதாகரமாக உயிரிழந்து போயினர். கப்பல் கடலில் அமிழ்ந்து போனதிற்கு அது பனிப்பாறையுடன் மோதியதே காரணம் என இதுவரை காலமும் நம்பப்பட்டு வந்தது. ஆனால் இப்பொழுது வெளியாகியுள்ள ஒரு புதிய தகவலின்படி, அது மட்டும் காரணமல்ல எனத் தெரிய வந்துள்ளது.

இந்த விபத்து சம்பந்தமாக கடந்த 30 ஆண்டுகளாக ஆய்வு செய்து வந்த ஐரிஸ் ஊடகவியலாளர் Senan Molony என்பவர் வெளியிட்டுள்ள தகவலின்படி, கப்பல் பனிப்பாறையுடன் மோதுவதற்கு முன்னர் அதன் நீராவி அறையில் (Boiler Room) தீப்பிடித்துள்ளதாகவும், அதுவே கப்பல் உடைந்து பனிப்பாறையுடன் மோதுவதற்கு வழிவகுத்தது எனவும் தெரிய வந்துள்ளது.

# உலகின் சண்டியர்கள்!

பனிப்போருக்கு முன்னர் மட்டுமின்றி அதன் பின்னரும் இராணுவ வல்லமையில் அசுர பலம் கொண்ட நாடுகளாக அமெரிக்காவும் ரஸ்யாவும் இருக்கின்றன. அந்த வகையில் அமெரிக்காவிடம் மொத்தம் 6,800 அணுவாயுதங்கள் (Nuclear Weapons) இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அதேநேரத்தில் ரஸ்யாவிடமோ இன்னும் கூடுதலாக, அதாவது 7,000 அணுவாயுதங்கள் இருப்பதாகத் தெரிய வந்துள்ளது. உலக அணுவாயுதத் தொகையில் 90 சதவீதமானவை இந்த இரு நாடுகளிடமே இருக்கின்றன.

# அரிய கலைப் பொக்கிசம்!

பிரான்சின் Ve'ze're பள்ளத்தாக்கில் 38,000 வருடங்கள் பழமை வாய்ந்தது எனக் கருதப்படக்கூடிய செதுக்கப்பட்ட சித்திரக் கலை வடிவம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது உலகின் ஆரம்பகால கலை வடிவங்களில் ஒன்று எனக் கருதப்படுகிறது.

# கஜமுகனுக்கு வந்த அதிர்ஸ்டம்!

கடந்த 10 வருடங்களில் தந்தங்களைப் பெறுவதற்காக சுமார் ஒரு இலட்சம் ஆபிரிக்க யானைகள் சட்டவிரோத வேட்டைக்காரர்களால் கொல்லப்பட்டுள்ளதாக நிபுணர்கள் தெரிவித்திருக்கின்றனர். அதன் காரணமாக 2007இற்கும் 2014இற்கும் இடைப்பட்ட காலத்தில் ஆபிரிக்க யானைகளின் தொகை 30 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

யானைத் தந்த வர்த்தகத்தில் உலகில் சீனாவே முன்னணியில், அதாவது 70 சதவீதமான வர்த்தகத்தைக் கொண்டுள்ளது. சீனாவில் மிக நீண்டகாலமாக யானைத் தந்தத்தில் கலைப் பொருட்களைச் செய்வது ஒரு பாரம்பரியத் தொழிலாக இருந்து வருகிறது. ஆனால் தற்போதைய சீன அரசாங்கம் சுற்றுச்சூழலைப் பேணும் நோக்கத்துடன் 2017 முடிவில் யானைத் தந்த வர்த்தகத்தை சீனாவில் முற்றிலுமாகத் தடை செய்யத் தீர்மானித்துள்ளது. சீனாவின் இந்தத் தீரமானம் யானைகளைப் பாதுகாப்பதில் ஒரு முன்னோடி நடவடிக்கை என வன ஜீவராசிகள் ஆர்வலர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

# உலகின் அரைவாசிச் சனத்தொகை மக்களின் சொத்துக்கு இணையாக, 8 பேர்களிடம் சொத்து

உலக அளவில் 8 பெரும் கோடீஸ்வரர்களிடம் குவிந்துள்ள தொகையானது, உலக மக்கள் தொகையில் 50 சதவீதம் பேரிடம் குவிந்துள்ள தொகைக்கு இணையாக உள்ளது என்று ஒக்ஸ்பாம் (Oxfam) ஆய்வறிக்கையொன்று தெரிவித்துள்ளது.

அதாவது உலகம் முழுவதும் உள்ள 360 கோடி வறுமையான மக்களின் சொத்துக்கு இணையான சொத்து 8 கோடீஸ்வரர்கள் வசம் உள்ளது. Bill Gates (7,500 கோடி டொலர்), Amancio Ortega (6,700 கோடி டொலர்), Warren Buffett (6,080 கோடி டொலர்) Carlos Slim Helu (5,000 கோடி டொலர்) Jeff Bezos (4,520 கோடி டொலர்) Mark Zuckerberg (4,460 கோடி டொலர்) Larry Ellison (4,360 கோடி டொலர்) Michael Bloomberg (4,000 கோடி டொலர்) ஆகியோரே இந்த எட்டுப் பேராகும்.

உலக பொருளாதார மைய மாநாடு தொடங்கும் முன்பாக தன்னார்வ உரிமைகள் குழுவான ஒக்ஸ்பாம் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது. உலகெங்கிலும் உள்ள பணக்காரர்கள் மற்றும் ஏழைகளுக்கிடையிலான இடைவெளி இதில் பட்டியலிடப்பட்டுள்ளது.

இந்த ஆய்வறிக்கைக்கு 99 சதவீத மக்களுக்கான பொருளாதாரம் என்று பெயரிட்டுள்ள ஒக்ஸ்ஃபாம், அனைத்து மக்களுக்கும் சென்றடையக்கூடிய மனித பொருளாதாரத்தை உருவாக்குங்கள், ஒரு சிலர் மட்டும் பயனடையும் பொருளாதாரத்தால் பயனில்லை என்று குறிப்பிட்டுள்ளது.

2015-ம் ஆண்டிலிருந்து பணக்காரர்களாக உள்ள ஒரு சதவீத மக்கள்தான் தொடர்ந்து பணம் ஈட்டியுள்ளனர். மற்றவர்களின் நிலை அப்படியே உள்ளது என்றும் சுட்டிக் காட்டியுள்ளது.

அடுத்த 20 ஆண்டுகளில் 500 கோடீஸ்வரர்களிடம் 210 லட்சம் கோடி டொலர் இருக்கும். இது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை (Gross domestic product) விட அதிகம் என்று சுட்டிக் காட்டியுள்ளது. அதாவது 130 கோடி மக்கள் தொகை கொண்ட இந்தியாவின் GDP-யை விட அதிகமாக இருக்கும் என ஒக்ஸ்பாம் அறிக்கை எச்சரித்துள்ளது.

உலகில் உள்ள ஏழை மக்களில் பாதிக்கும் குறைவானவர்களின் சொத்து மதிப்பானது கடந்த இருபது ஆண்டுகளில் உள்ளதை விட தற்போது குறைந்துள்ளது. கோடீஸ்வரர்களில் 10 சதவீதம் பேர் சீனா, இந்தோனேசியா, லாவோஸ், இந்தியா, வங்கதேசம், இலங்கை உள்ளிட்ட நாடுகளில் உள்ளனர். இவர்களின் வருமானம் கடந்த 20 ஆண்டுகளில் 15 சதவீதம் அதிகரித்துள்ளது. அதேசமயம் ஏழைகளின் வருமானம் கடந்த 20 ஆண்டுகளில் 15 சதவீதம் சரிந்துள்ளது.

பணியிடங்களில் ஊதியம் வழங்கலில் பாரபட்சம், பெண்களுக்கு குறைவான ஊதியம் ஆகியன ஏற்றத் தாழ்வுக்கான முக்கியக் காரணமாகும். பெண்களை விட ஆண்களுக்கு 70 முதல் 90 சதவீதம் வரை ஊதிய வித்தியாசம் உள்ளதாக அந்த ஆய்வறிக்கை குறிப்பிட்டுள்ளது.

# ஜனாதிபதி – பிரதமர் மோதல் லேக்ஹவுசுக்கும் பரவியது!

இலங்கையின் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளான சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து உருவாக்கிய கூட்டரசாங்கம் (அவர்களது வார்த்தையில் 'நல்லாட்சி அரசாங்கம்') இரண்டு வருடங்களைப் பூர்த்தி செய்துள்ள நிலையில், இரண்டு கட்சிகளினதும் தலைவர்களான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான முரண்பாடு மேலும் பல தளங்களில் பரவிச் செல்லத் தொடங்கியுள்ளது.

அண்மையில், அதிர்ஸ்ட இலாபச் சீட்டுகளின் விலையை அதன் விற்பனையாளர்களின் வற்புறுத்தலுக்கு இணங்க ஜனாதிபதி சிறிசேன விலைக்குறைப்புச் செய்ய, ஐ.தே.கவைச் சேர்ந்த நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க மீண்டும் விலையைக் கூட்டி ஜனாதிபதியின் முகத்தில் கரி பூசினார். இந்த மோதலுக்கு முன்னர் அத்தியாவசியப் பொருட்களுக்கான விலைகள் மீது 'வற்' வரி விதிப்பது சம்பந்தமாகவும் இரு தரப்பாருக்கும் ஒரு மோதல் நிகழ்ந்தது.

மத்திய வங்கி ஆளுநராக இருந்த அர்ச்சுனா மகேந்திரன் பிணைமுறி வழங்கியதில் செய்த பல நூறு கோடி ரூபா மோசடி சம்பந்தமாக ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹெந்துநெத்தி தலைமையிலான 'கோப்' விசாரணைக்குழு விசாரணைகளில் மகேந்திரன் குற்றவாளி எனத் தெளிவாக இனம் காணப்பட்டு, அது சம்பந்தமான அறிக்கை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இருந்தும் மகேந்திரனின் நண்பரான பிரதமர் ரணிலும், அவரது ஐ.தே.கவும் அவரைக் காப்பாற்றப் படாதபாடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், பிணைமுறி வழங்கியதில் நடந்த மோசடி குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதி சிறிசேன ஓய்வுபெற்ற நீதியரசர் தலைமையில் ஆணைக்குழு ஒன்றை நியமித்ததின் மூலம், ரணில் மகேந்திரனைக் குற்றமற்றவர் எனக்காட்ட எடுக்கும் முயற்சிக்கு சாட்டையடி கொடுத்துள்ளார்.

இந்த வரிசையில் இப்பொழுது சிறிசேன – ரணில் மோதல் களமாக இலங்கையின் மிகப்பெரிய ஊடக நிறுவனமான, அரச கட்டுப்பாட்டிலுள்ள 'லேக்ஹவுஸ்' நிறுவனம் மாறியுள்ளது. லேக்ஹவுஸ் நிறுவனம் ரணிலின் விசுவாசியான ஊடக அமைச்சர் கயந்த கருணதிலகவின் கீழ் இருக்கின்றது. அந்நிறுவனத்தின் தலைவராக ரணிலின் இன்னொரு விசுவாச அமைச்சரான சட்டம் – ஒழுங்கு அமைச்சர் சாகல இரத்தினாயக்கவின் சகோதரர் கவன் இரத்தினாயக்க இருக்கின்றார்.



## பாண்டியன்

இந்த நிலைமையில், லேக்ஹவுஸ் நிறுவனம் வெளியிடும் சிங்கள மொழிப் பத்திரிகைகளில் ஜனாதிபதி சிறிசேனவுக்கு போதியளவு முக்கியத்துவம் வழங்கப்படுவதில்லை என்ற ஒரு குற்றச்சாட்டை அங்கு பணிபுரியும் ஜனாதிபதியின் ஆதரவாளர்கள் அவரது கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளனர். அதைத் தொடர்ந்து லேக்ஹவுஸ் நிறுவனத்தின் முகாமைத்துவம், நிர்வாகம் மற்றும் துறைகளிலுள்ள 'குறைபாடுகள்' குறித்து ஆராய்வதற்கென ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதியான நிமல் திசாநாயக்க தலைமையில் நால்வர் கொண்ட குழுவொன்றை ஜனாதிபதி சிறிசேன நியமித்திருக்கிறார். இதுவும் ரணிலுக்கு எதிரான ஒரு நகர்வு என்றே அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

ஏனெனில், வழமையாக இந்த மாதிரியான நிறுவனங்களின் விவகாரங்களை பிரதமரே நேரடியாகக் கையாள்வது வழமை. ஆனாலும் ஜனாதிபதி சிறிசேன தனக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்த விசாரணைக் குழுவை அமைத்திருக்கிறார்.

இது ஒருபுறமிருக்க, கனிம வளக் கூட்டுத்தாபனத்துக்கு கீழ் வருகின்ற லங்கா நிலக்கரி நிறுவனத்தின் தலைவராக ஜனாதிபதி சிறிசேனவினால் நியமிக்கப்பட்டிருந்த மைத்திரி குணரத்ன என்பவர் பிரதமர் ரணிலை பகிரங்கமாக விமர்சித்தார் என்பதற்காக அவரை ரணில் பதவி நீக்கம் செய்திருக்கிறார்.

ஜனாதிபதி சிறிசேன கடந்த சில மாதங்களாக ரணில் அமைச்சரவையிலுள்ள சில அமைச்சர்களின் செயல்பாடுகள் மீது கடும் அதிருப்தியில் இருப்பதாகவும், அதனால் அவர் அமைச்சரவை மாற்றம் ஒன்றுக்குத் திட்டமிடுகிறார் என்றும் ஊடகங்களில் அடிக்கடி செய்திகள் வந்தவண்ணம் உள்ளன. அந்த அமைச்சரவை மாற்றத்தின் போது ஐ.தே.கவைச் சேர்ந்த நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவும்,

**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...**

# கண்டன அறிக்கை




ஆணாதிக்க சமுதாயமானது பொதுவெளியை ஆண்களுக்கென்றே ஒதுக்கி வைத்துள்ளது. பெண்களுக்கு என்று இந்த பால்வாத சமுதாயம் விட்டுவைத்திருப்பது வீடும் அது சார்ந்த வெளிகளும் மட்டுமே. ஆனாலும் ஆளுமைமிக்க பெண்கள் தொடர்ச்சியாக இந்த பொது – தனிப்பட்டது என்ற பாகுபாட்டிற்கு எதிராக தொடர்ந்தும் போராடி வந்துள்ளார்கள். இப்படியாக போராடும் பெண்கள் மீது பால்வாதம் தொடர்ச்சியாக தாக்குதலை தொடுத்து வந்திருக்கிறது. இப்படிப்பட்ட தாக்குதல்களின் போது பால்வாதம் எப்போதும் பெண் உடல், அதன் செயற்பாடுகள், பெண்களது நடத்தைகள் என்பவற்றின் மீதே தனது வன்முறையைக் கட்டவிழ்த்து விடுகின்றது. இந்த வகையில் பெண்களை தொடர்ந்தும் வீட்டினுள் முடக்கி வைப்பதற்கு பால்வாதம் பாவிக்கும் ஆயுதமாகவே பாலியல்ரீதியான தாக்குதல்கள் புரிந்து கொள்ளப்பட வேண்டும்.அரசியல், பொருளாதாரம், கல்வி, கலை, இலக்கியம் போன்ற அனைத்து தளங்களிலும், அந்தத் துறைகளில் தலையெடுக்க முனையும் பெண்களை ஆண்கள் தொடர்ச்சியாகவே தாக்கிவந்துள்ளார்கள். தொடர்ந்தும் தாக்கி வருகிறார்கள். பெண்களின் அறிவை மறுப்பது, அவர்களது படைப்புகளை தரமற்றதாக மட்டந்தட்டுவது போன்றவை சர்வசாதாரணமாக தொடர்ந்து நடப்பவைதாம். ஆனால், பெண்களை இந்த சாதாரண வழிமுறைகளினால் தடுத்து நிறுத்த முடியாதபோது, ஆணாதிக்கவாதிகள் கையில் எடுக்கும் கடைசி ஆயுதம்தான் பெண் உடல் சார்ந்த பாலியல் தாக்குதல்கள், பாலியல் தொந்தரவுகள்.

டொறொன்ரோ நகரில் கடந்த வாரம் மஜீத் எழுதிய நான்கு புத்தகங்களின் வெளியீடு நடைபெற்றது. இந்த நிகழ்வை ‘‘பகு பதம்’’ நண்பர்கள் ஒழுங்குசெய்திருந்தனர். நம் காலத்தின் மந்தாரமான விமர்சனமுறைகள் பற்றியும், கனேடிய இலக்கியச் சூழல் பற்றிய உரையாடல்களும், இலங்கையிலிருந்து வெளிவரும் சஞ்சிகைகளின்ன விநியோகம், நூலகங்களுடன் தொடர்புகொள்ளல் எனும் வகையிலான உரையாடல்கள் நிகழ்ந்தன.

ஆண்களால் எழுதப்படும் இக்கால ஆக்கங்களில் பெண்களின் உடலுறுப்புகளை எழுதும் விதங்கள் சலிப்பையும், சில தருணங்களில் கோபத்தையும் கொணர்கின்றன எனும் கருத்து பெண்கள் தரப்பிலிருந்து வெளிவந்தது. அன்று இரவு இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட நடராஜா முரளிதரன் தனது முகநூலில் ஒரு ‘‘கவிதை’’யை, இந்த நிகழ்வை அடிப்படையாகக்கொண்டு எழுதியிருந்தார். அந்தக் ‘‘கவிதை’’ பின்வருமாறு:

தனிமைத் துயரம்
அவனை அழித்துக் கொள்ளுமாறு
தூண்டுகிறது
பிள்ளைகள் தன்னைப்
புறந்தள்ளி விட்டார்கள் எனக்...
கதறியழுகின்றான்
தொடர்ந்து உழைத்துக்
கொண்டிருக்கிறான்
தொடர்ந்து குடித்துக் கொண்டிருக்கிறான்
எனது ஆறுதல் வார்த்தைகள்
முனை மழுங்கிய அம்புகளாய்
வீழ்ந்து மடிகின்றன
சாவுக்கால் மீண்டெழுந்து வந்தவள்
ஆண் கவிஞர்களை
மார்பகங்களையும் யோனிகளையும்
பாடுதற்காய் சபிக்கின்றாள்
அவ்வாறெனில் அந்தப் பெண்
மார்பகங்களைத் தூக்கிக் காட்டுகின்ற
அதிநவீன மார்புக்கச்சையை
ஏன் அணிந்திருக்கிறாள்
எனக் கல்லை வீசுகிறான் இன்னொருவன்
சமூகத்தின் போதாமைகள் குறித்து
மைந்தர்கள் மீண்டும் ஒரு முறை
கிளர்ந்தெழுந்தார்கள்
வழி தவறிய பறவையாக
என்னைப் பாவனை பண்ணாமல்
மந்தைகளுள் என்னையும் ஒருவனாகப்
பிணைத்துக் கொள்ளும் இலயிப்பில்

இந்த ''கவிதை''யில் வரும் இரண்டாம் பந்தியானது தோழி நிரூபா அந்த கூட்டத்தில் பேசிய அதே கருத்துக்களை சுட்டி நிற்கிறது. அடுத்த பந்தியானது ''அந்தப் பெண்'' என்று தொடர்கையில் இதுவும் தோழி நிரூபாவை பற்றியே பேசுகிறது என்பது அனைவருக்கும் வெளிப்படையாக தெரியக்கூடியதுதான்.

இந்தக் ''கவிதை'' வெளியானதிலிருந்து பலர் முரளிதரனிடம் கவிதையில் தனிப்பட்ட ஒரு பெண் மீதான பாலியல்ரீதியான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும், இது தவறான செயற்பாடு என்றும் சுட்டிக்காட்டியிருந்தனர். ஆனால் அவர், இது ஒரு இலக்கியப் படைப்பு என்றும், பொதுப்படையாக பேசிச் செல்வதாகவும், யாரையும் தனிப்பட தாக்கும் நோக்கம் தனக்குக் கிடையாது என்றும் தொடர்ந்து ஒரு வாரமாக சாதித்து வந்தார்.

தற்போது அவர் இந்தப் பதிவை தனது முகநூல் தளத்திலிருந்து நீக்கிவிட்டிருந்தாலும், இது போன்ற தாக்குதல்கள் மலினப்பட்டுவிட்ட சூழலில், பொதுத்தளத்தில் செயற்படும் பெண்கள் மீது இந்தத் தாக்குதல்கள் ஏற்படுத்தக்கூடிய உடனடி மற்றும் நீண்டகால விளைவுகள் குறித்த அக்கறையுடன் இவ்வாறான எதிர்வினையை நிகழ்த்தவேண்டியவர்களாக இருக்கிறோம்.

1) உரையாடல் என்று வரும்போது பலவிதமான மாற்றுக் கருத்து உள்ளவர்களும் தமது கருத்துக்களை முன்வைத்து சுதந்திரமாக, எந்தவிதமான பின்விளைவுகள் பற்றிய பயமும் இன்றி விவாதிப்பதற்கான சூழல் இருப்பது அவசியமானது. அந்த வகையில் அங்கு முன்வைக்கப்படும் யாருடைய கருத்துக்களையும், வேறு யாருமே நிபந்தனை இன்று ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எவரும் நிர்ப்பந்திக்க முடியாது. இதே உரையாடல்கள் பின்னர் சமூக வலைத்தளங்களிலும் தொடர்வது ஆரோக்கியமானதே. ஆனால் முரளிதரன் இந்த ஆரோக்கியமான விவாதத்திற்கான எல்லைகளைக் கடந்து, தனிப்பட்ட முறையில் தோழி நிரூபா மீது பாலியல்ரீதியான தாக்குதலை நடத்தியுள்ளார்.

2) பெண்கள் முன்வைக்கும் கருத்துக்களுக்கு முகங்கொடுக்க முடியாத ஆண்கள், சம்பந்தப்பட்ட பெண்கள் மீது தனிப்பட்ட, பாலியல்ரீதியான தாக்குதலில் ஈடுபடுவது எந்த வகையிலும் அனுமதிக்கப்பட முடியாதது. நிஜ வாழ்வில் மட்டுமல்ல, வலைத்தளங்களிலும் கூட இதுதான் நியமம். இது அவர்களுடைய பாலியல் வக்கிரத்தைக் காட்டுகிறது. தனது தவறை ஒத்துக்கொள்ள மறுத்து வாதம் புரிவதும், தவறை சுட்டிக்காட்டுபவர்கள் மீது மேலும் தாக்குதல்களை தொடர முனைவதும் அனுமதிக்க முடியாதன.

3) பாலியல் ரீதியான தாக்குதல்கள் பால்வாத சமுதாயத்தில் பெண்களை பொதுவெளியில் இருந்து துரத்தியடிப்பதை நோக்கமாகக் கொண்டவை. பெண்கள் பொதுவெளிகளில் சுதந்திரமாகச் செயற்பட வருவதே அரிதாக இருக்கும் இன்றைய நிலையில், அவர்கள் மீது இவ்வகையான தாக்குதல்களை நிகழ்த்துவது நீண்டகால நோக்கில் மிகவும் பாரதூரமான எதிர்விளைவுகளை கொண்டுவரக்கூடியது என்பதனால், சமூக அக்கறை உள்ள எவரும் இவற்றை அறவே அனுமதிக்க முடியாது.

4) பாலியல்ரீதியான தாக்குதல்கள் பாதிக்கப்பட்ட பெண்களை மிகவும் மனவுளைச்சலுக்கு உள்ளாக்குவதுடன், சம்பந்தப்பட்ட பெண்களிடம் உடனடியான, நீண்டகால உளவியல் காயங்களை ஏற்படுத்துகின்றன. இதனால் இவற்றை வெறுமனே கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டு செல்ல முடியாது.

5) இந்த அறிக்கையை தயாரிப்பதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது நடராஜா முரளிதரன் தனது ''கவிதையை'' அழித்திருக்கின்றபோதும், கவிதை பற்றிய குற்றவுணர்வையோ அது உருவாக்கியிருக்கக்கூடிய மனவுளைச்சல்கள் பற்றியோ எந்தப் புரிதல்களையும் அவரது முகநூற்பக்கத்தில் காணமுடியவில்லை.

6) தோழி நிரூபாவுடன் இவ்விடயத்தில் நாம் முழுமையான ஒருமைப்பாட்டை தெரிவித்துக் கொள்கிறோம். இந்தக் கருத்துக்களுடன் உடன்பாடு கொண்டவர்கள் எமது அறிக்கையை ஏற்பிசைவு (endorse) பண்ணுமாறும், தமது சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து, இதற்கு போதிய வீச்சை ஏற்படுத்துமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

7) எமது இந்தக் கண்டனம் நடராஜா முரளிதரனை முதன்மைப்படுத்தியிருந்தாலும், பெண்கள் மீதான பாலியல் தாக்குதல்களும், பெண்விடுதலை, பெண்ணியக் கருத்தியல்களைப் பேசுபவர்களை கேலிப்பொருளாக்கும் பாங்கும் சமூக வலைத்தளங்களிலும், இதர கலை இலக்கிய வெளிகளிலும், நடைமுறை வாழ்விலும் அதிகரித்துவருவதை மிக மோசமான ஒரு சமிக்ஞையாக கருதுகிறோம்.

8) இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற நபர்களுக்கு தனிப்பட்ட உறவுகள் காரணமாக ஆதரவளிப்பதும், அவர்களின் செயற்பாடுகளுக்கு நியாயம் கற்பிப்பதும் இதுபோன்ற நடவடிக்கைகளும் சூழலும் தொடர்வதை ஊக்குவிப்பனவாக அமையும் என்பதையும் சுட்டிக்காட்டுகிறோம். தமிழ் சூழலில் பரவிவரும் பெண்கள் மீதான தொடர்ச்சியான தாக்குதல்கள், பாலியல் தொல்லைகளுக்கு எதிரான போராட்டத்தில் ஒரு நிகழ்வாக மாத்திரமே இது புரிந்து கொள்ளப்பட வேண்டுமென்றும், இதனை பலரும் பல்வேறு விதத்திலும் தொடர்வதே எமது சமூக, அரசியல், கலை, இலக்கிய சூழலுக்கு ஆரோக்கியமான அடித்தளத்தை அமைக்கும் என்பதையும் வலியுறுத்திக்கொள்கிறோம்.

இப்படிக்கு.........

கிருத்திகன்

அருண்மொழிவர்மன்

சேனா

ரகுமான் ஜான்

சந்திரா

நிரூபா

யாழினி

சபேசன்

மெலிஞ்சி முத்தன்

சுடரகன்

ஸ்ரீரஞ்சனி

அகிலன்

அவ்வை

விக்கினெஸ்வரன்

அரசி

**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...**

# தலையாரியே திருடனுக்கு நற்சாட்சிப் பத்திரம் கொடுக்கும் விசித்திரம்!

இன்றைய 'நல்லாட்சி' அரசாங்கம் பதவிக்கு வந்தபின்னர் இலங்கை மத்திய வங்கி ஆளுநராக தனது நெருங்கிய நண்பரான அர்ச்சுனா மகேந்திரன் என்பவரை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியமித்தார். அவரோ நாட்டின் முதுகெலும்பான மத்திய வங்கியை தனது சொந்த வீட்டுச் சொத்தாகப் பாவித்து பிணை முறிகள் ஊடாக பல கோடி ரூபாபணத்தைச் சம்பாதித்துக் கொண்டுள்ளார்.

இந்த விவகாரம் முதலில் சில மத்திய வங்கி அதிகாரிகளினாலும், பின்னர் பொருளாதார வல்லுனர்களாலும் சுட்டிக்காட்டப்பட்டு, பின்னர் பல்வேறு அரசியல் கட்சிகளினதும் பேசுபொருளாகி, இறுதியில் அரசாங்கமே ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் தலைமையில் நியமிக்கப்பட்ட 'கோப்' விசாரணைக்குழு அறிக்கையின் மூலம் நிரூபணமாகிவிட்டது.

இருந்தும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், அவரது ஐக்கிய தேசியக் கட்சி சகாக்களும், அர்ச்சுனா மகேந்திரனை குற்றமற்றவராக, தூய்மையானவராகக் காட்டப் படாதபாடுபடுகின்றனர். ஒரு பக்கத்தில் நிறைவேற்று ஜனாபதி முறைமையை ஒழித்து சகல அதிகாரங்களையும் நாடாளுமன்றத்திற்கு வழங்க வேண்டும் எனச் சொல்லிக்கொண்டு, மறுபக்கத்தில் நாடாளுமன்றத்தில் விவாதிக்க , சமர்ப்பிக்கப்பட்ட கோப் அறிக்கையை ரணில் சட்டமா அதிபருக்கு அனுப்பி நாட்டின் அதியுயர்ந்த சட்டவாக்க சபையான நாடாளுமன்றத்தை அவமரியாதைக்கு உள்ளாக்கியுள்ளார்.

இன்னொரு பக்கத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மத்திய வங்கி பிணைமுறி விவகாரம் பற்றி விசாரணை செய்வதற்கென மூவரடங்கிய ஆணைக்குழு ஒன்றை நியமித்திருக்கிறார். அந்த ஆணைக்குழு விசாரணைக்கென மூன்றுமாத காலம் எடுத்து, மேலம் இந்த விவகாரம் சம்பந்தமான விசாரணையை மேலும் இழுத்தடிக்கப் போகின்றது என்பது ஒருபுறமிருக்க, ஜனாதிபதி நாடாளுமன்றத்திலும், சட்டமா அதிபரிலும் நம்பிக்கை இல்லாமலா தான் தனியாக ஒரு விசாரணைக் குழுவை அமைத்திருக்கிறார் என்ற கேள்வியும் எழுகின்றது.

இது ஒருபுறமிருக்க, இந்த விவகாரத்தில் இன்னொரு வேடிக்கையான விடயமும் சேர்ந்து கொண்டிருக்கிறது. அதாவது இந்த மத்திய வங்கி பிணைமுறி விற்பனையால் அரசாங்கத்துக்கு எந்தவிதமான இழப்பும் ஏற்படவில்லை என உலக ஏகாதிபத்திய வட்டிக்கடையான உலக வங்கி தெரிவித்துள்ளதாக கொழும்பு தினசரி ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. இந்த செய்தி உண்மையால், கொள்ளைக்காரனுக்கு தலையாரியே நற்சாட்சிப் பத்திரம் கொடுத்த கதையாகத்தான் இது இருக்கும்.

உலக வங்கியுடன் அநேகமாக உலகிலுள்ள பெரும்பாலான நாடுகளுக்கு பல கசப்பான அனுபவங்கள் இருக்கின்றன. இலங்கைக்கும் அவ்வாறான கசப்பான அனுபவங்கள் உண்டு. 1953இல் அப்போதைய டட்லி சேனநாயக்க தலைமையிலான ஐ.தே.க. அரசாங்கத்தில் நிதி அமைச்சராக இருந்த ரணிலின் மாமனாரான ஜே.ஆர்.ஜெயவர்த்தன, உலக வங்கியின் ஆலோசனையைக் கேட்டுத் தயாரித்த வரவு செலவுத் திட்டத்தால் அதற்கெதிராக நாட்டு மக்கள் கிளர்ந்தெழுந்ததின் விளைவாக, பிரதமர் டட்லி பதவியைத் துறந்து நாட்டை விட்டே தலைதெறிக்க ஓடிய 'மகத்தான' வரலாறு இலங்கைக்கு இருக்கிறது. அதற்குக் காரணம், நாட்டு மக்களின் இடுப்புப் பட்டியை இறுக்கும்படி அரசாங்கங்களுக்கு உலக வங்கி வழமையாகக் கூறும் அறிவுரைதான் காரணம்.

தற்போதைய இலங்கை அரசாங்கம் ஏகாதிபத்திய விசுவாசம் மிக்க அரசாங்கம் என்றபடியால், உலக வங்கி மத்திய வங்கி பிணைமுறி விவகாரத்தில் நாட்டு மக்களின் ஏகோபித்த கருத்துக்கு எதிராக இந்த அரசாங்கத்துக்கு நற்சாட்சிப் பத்திரம் வழங்கியிருந்தால், அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

**- இரத்தினம்**

# ஊழல் செய்வதில் மகிந்த அரசை 'நல்லாட்சி' அரசு தோற்கடித்திருக்கிறது!

இலங்கையின் தற்போதைய அரசாங்கத்தின் கீழ் முன்னைய மகிந்த ராஜபக்ச ஆட்சியிலிருந்ததை விட ஊழல்கள் அதிகரித்துள்ளதாக 'ட்ரான்பரன்சி இன்ரர்நாசனல்' (Transparency International) வெளியிட்டுள்ள புள்ளிவிபரங்களில் இருந்து அறிய முடிகிறது. ஊழலுக்கு எதிரான இவ்வமைப்பு வருடாவருடம் உலக நாடுகளின் ஊழல் சம்பந்தமான தரவரிசையை வெளியிடுவது வழக்கம்.

அதன்படி 2014இல் மகிந்த ஆட்சியில் 175 நாடுகளின் வரிசையில் இலங்கை 85ஆவது இடத்தில் இருந்தது. பின்னர் 2015 ஜனவரியில் 'நல்லாட்சி' அரசு பதவிக்கு வந்ததும், 168 நாடுகளின் மத்தியில் இலங்கை 83ஆவது இடத்திற்கு முன்னேறியது. ஆனால் நல்லாட்சியின் இரண்டாவது வருடமான 2016இல் 176 நாடுகளின் மத்தியில் இலங்கை 95ஆவது இடத்திற்குச் சென்றுள்ளது. அதாவது மகிந்த காலத்தைவிட 10 இடங்கள் பின்னுக்குச் சென்றுள்ளது.

'நல்லாட்சி' ஏற்பட்டதும் ஊழல் செய்வதற்கு சற்றுத் தயங்கியவர்கள், நல்லாட்சியிலும் அதைத் தாராளமாகச் செய்யலாம்

**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...**

# ஆழ்ந்த அனுதாபங்கள்

இலங்கை இடதுசாரி இயக்கத்தின் மூத்த தோழர்களில் ஒருவரான சண்முகம் கதிரவேலு (முன்னாள் பொறியியலாளர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்) அவர்களின் பாசமிகு துணைவியார் திருமதி நவநாயகமலர் கதிரவேலு அவர்கள் 2017 பெப்ருவரி 02ஆம் திகதி தமது 73ஆவது வயதில் கனடாவின் ஸ்கபரோ நகரில் காலமானார் என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவரது மறைவால் துயருற்றிருக்கும் தோழர் கதிரவேலு மற்றும் மகள், மருமகன், பேரப்பிள்கைள், உற்றார் உறவனர் அனைவருக்கும் 'வானவில்' சார்பாக எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### ஆசிரியர் குழு, 'வானவில்'

**13ம் பக்கத்தொடர்ச்சி...**

*என்று கண்டதும் தமது கைவரிசையைக் காட்ட ஆரம்பித்துள்ளதையே இந்த இறக்கம் எடுத்துக் காட்டுகிறது.*

*1994 முதல் 2015 வரை சுமார் 21 வருடங்கள் அதிகாரம் எதுவும் இல்லாமல் 'காய்ந்து' கொண்டு கடும் பசியில் இருந்த ஐ.தே.கவினர் அதிகார வாய்ப்புக் கிடைத்ததும் சும்மாவா இருப்பார்கள்?*

*இது ஒருபுறமிருக்க, ட்ரான்பரன்சி இன்ரநாசனல் வெளியிட்டுள்ள ஊழல் குறைவான நாடுகளின் பட்டியலில் முதல் ஐந்து இடங்களையும் முறையே டென்மார்க், நியூசிலாந்து, பின்லாந்து, சுவீடன், சுவிற்சிலாந்து ஆகிய நாடுகள் பிடித்துள்ளன. இலங்கையின் அண்டை நாடுகளான இந்தியாவும் மாலைதீவும் முறையே 79ஆம் 95ஆம் இடங்களில் இருக்கின்றன. பட்டியலில் இறுதி நிலையில் உள்ள நாடாக ஆபிரிக்காவில் உள்ள சோமாலியா இருக்கின்றது.*

---

*ஆயுதங்கள் பரிகரிப்பார், அமைதி காப்பார்,*

*அவரவர்தம் வீடுநகர் நாடு காக்க*

*வாயடியும் கையடியும் வளரச் செய்வார்!*

*மாம்பிஞ்சி யுள்ளத்தின் பயனும் கண்டோம்!*

*தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்*

*தொல்லுலக மக்களெலாம் 'ஒன்றே' என்னும்*

*தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! ஆங்கே*

*சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்த தாலே.*

**-பாரதிதாசன்**

**10ம் பக்கத்தொடர்ச்சி...**

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் அவர்களது அமைச்சுப் பதவிகளில் இருந்து மாற்றப்படுவார்கள் என்ற ஊகங்களும் தெரிவிக்கப்பட்டன.

ஆனால் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும், சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஊாசளைவலைநெ Legard ம் இலங்கைக்கு வந்து போனபின்னரே அமைச்சரவை மாற்றங்களை மேற்கொள்ள ஜனாதிபதி தீரமானித்துள்ளார் என அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

---

**12ம் பக்கத்தொடர்ச்சி...**

துஸ்யந்தி

தீபா

தான்யா

சத்தியா

நந்தினி

ராதா

கிருபா

கற்சுறா

அதீதா

மைதிலி

ப.அ. ஜெயகரன்

திருவருட்செல்வி ஜெயகரன்

சீவரட்ணம்

அருள்

மயில்

தர்சன்

ரதன்

MisFits for Change

தேடகம்

**முன்பக்கத் தொடர்ச்சி...**

கூட்டமைப்பினர் அரசாங்கத்தின் இந்த நிலைப்பாடு குறித்து என்ன சொல்லப் போகின்றனர்? என்ன செய்யப் போகின்றனர்?

ஏனெனில் கடந்த ஜனாதிபதி தேர்தலின் போதும், நாடாளுமன்றத் தேர்தலின் போதும் நிபந்தனை ஏதும் இன்றி மைத்திரி – ரணில் கூட்டை ஆதரித்து அவர்களை கூட்டமைப்பினர் வெற்றிபெற வைத்தனர். கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் வாக்குகளை இந்த வலதுசாரிக் கும்பலுக்கு கொள்ளையடித்துக் கொடுக்காவிட்டால் மைத்திரி – ரணில் கோஸ்டி ஒருபோதும் அதிகாரத்துக்கு வந்திருக்க முடியாது.

தேர்தல் நேரத்தில் இனப் பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாக 'நல்லாட்சி' தலைவர்களுக்கும், கூட்டமைப்புக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று செய்தால் நல்லது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும், கூட்டமைப்பின் சில பங்காளிக் கட்சிகளும் வலியுறுத்தியபோது, சம்பந்தன் தனக்கு மைத்திரி, ரணில், சந்திரிக ஆகியோர் மீது பூரண நம்பிக்கை இருப்பதால் ஒப்பந்தம் தேவையில்லை என நிராகரித்துவிட்டதாக இப்பொழுது தகவல்கள் வெளியாகியுள்ளன. அதுமாத்திரமின்றி, இனப்பிரச்சினைக்கு வடக்கு கிழக்கு இணைந்த சமஸ்டி தீர்வு கிடைக்கும் என்றும் சம்பந்தன் திரும்பத் திரும்பக் கூறி வந்தார்.

ஆனால் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பிரதான கட்சிகள் இரண்டும் இனப் பிரச்சினைக்கு தீர்வாக சமஸ்டி ஒருபோதும் வழங்கப்படமாட்டாது என்றும், அதேபோல வடக்கு கிழக்கும் இணைக்கப்படமாட்டாது என்றும் தெளிவாகக் கூறிவிட்டன. அதுமட்டுமின்றி, இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் வடக்கு கிழக்கை இணைத்து வைத்த இந்திய அரசாங்கத்தின் தற்போதைய வெளியுறவுச் செயலர் ஜெய்சங்கர்

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்தபோது, இரு மாகாணங்களின் இணைப்பை இந்தியா இனிமேலும் வலியுறுத்தாது என கூட்டமைப்புத் தலைவர்களிடம் நேரடியாகவே கூறி விட்டார்.

இந்தச் சூழ்நிலையில்தான், மாகாணசபைகளைக் கலைக்கும் அல்லது அதிகாரங்களை மீளப்பெறும் அதிகாரம் மத்திய அரசுக்கு புதிய அரசியல் அமைப்பின மூலம் வழங்கப்படும் என ஜயம்பதி விக்கிரமரத்ன புதிய குண்டொன்றைத் தூக்கிப் போட்டிருக்கிறார். அது மட்டுமின்றி, இந்த ஏற்பாடு ஜே.ஆர்.ஜெயவர்த்தன கொண்டு வந்த 1978 அரசியல் அமைப்பில் இல்லையென்றும் சுட்டிக்காட்டி இருக்கிறார். அப்படிப் பார்த்தால் வரப்போகும் புதிய அரசியல் அமைப்பு ஜே.ஆரின் அரசியல் அமைப்பையும் விட மோசமாக இருக்கப் போகிறது என்பதே அதன் அர்த்தம்.

இந்த நிலைமையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் என்ன செய்யப் போகின்றனர் என்ற எதிர்பார்ப்பு தமிழ் மக்களிடமும், தமிழ் தேசியவாதிகளிடமும் எழுவது இயல்பானதே. ஆனால் அவர்கள் செய்வதற்கு எதுவும் இல்லை என்பதை ஏற்கெனவே எடுத்துக்காட்டிவிட்டனர். அவர்கள் தமது நிலையிலிருந்து ஏற்கெனவே படிப்படியாக விலக ஆரம்பித்துவிட்டனர். அதை அவர்கள் தெரிந்து கொண்டு செய்தபோதிலும், வழமைபோல மக்களுக்கு இன்னொரு படத்தைக் காட்டிக்கொண்டு இருக்கின்றனர்

அரசாங்கம் சமஸ்டி தர முடியாது என்றபொழுது கூட்டமைப்பினர் அதை ஏற்றுக்கொண்டனர். பின்னர் வடக்கு கிழக்கை இணைக்க முடியாது என்றபொழுது அதையும் ஏற்றுக் கொண்டனர். இப்பொழுது மாகாண சபைகளை கலைக்கும் அதிகாரம் புதிய அரசியல் அமைப்பில் இடம்பெறப் போகிறது என்று தெரிவித்த ஜயம்பதி விக்கிரமரத்ன, அதை கூட்டமைப்பினரும் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் கூறியிருக்கிறார். கூட்டமைப்பினர் அவரது கூற்றை இதுவரை மறுக்காததில் இருந்தே கூட்டமைப்பினரும் அதற்குச் சம்மதம் என்பது நிரூபணமாகிறது. அதாவது வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் எடுத்த தனிநாடு போய், அதன் பின்னர் சமஸ்டி போய், அதன் பின்னர் வடக்கு கிழக்கு இணைப்பு போய், இப்பொழுது மாகாண சபைகள் கூட சுயாதீனமாக இயங்க முடியாத தடை போடப்பட போகிறது.

இந்த நிலைமையில் தமிழ் தலைமைகள் தொடர்ந்து தமிழ் மக்களுக்கு எதிராகச் செய்து வரும் நாசகார வேலைகளைக் கொஞ்சம் சீர்தூக்கிப் பார்ப்பது அவசியம்.

1957இல் இனப் பிரச்சினைக்கு தீர்வாக பண்டா — செல்வா ஒப்பந்தம் ஏற்பட்ட பொழுது அதை முறியடிக்க ஐ.தே.க. நாட்டில் குழப்பங்களை உருவாக்கியது. அந்த நேரத்தில் பண்டாரநாயக்கவின் கரங்களைப் பலப்படுத்தி ஒப்பந்தத்தைப் பாதுகாப்பதற்குப் பதிலாக, தமிழரசுக் கட்சியினர் அநாவசியமான முறையில் சிங்கள சிறீ எதிர்ப்புப் போராடத்தை உருவாக்கி, சிங்கள இனவாதிகளின் கரங்களைப் பலப்படுத்தி பண்டாரநாயக்கவை கையறு நிலைக்குத் தள்ளி, அவர் வேறு வழியில்லாமல் ஒப்பந்தத்தைக் கிழித்தெறிய வைத்தனர்.

1987இல் இனப் பிரச்சினைத் தீர்வாக இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபை முறைத் தீர்வை முன்வைத்த போது, அ.அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமை அதை ஆதரித்தாலும், அவரைப் புலிகள் கொலை செய்த பின் தலைமைப் பொறுப்பை ஏற்றவர்கள் புலிகளின் அதிகார வேட்கைக்கு அடிபணிந்து, அந்த ஒப்பந்தத்தை சிங்கள இனவாதிகளுடன் இணைந்து எதிர்த்தனர்.

அதேபோல 2000ஆம் ஆண்டில் சந்திரிக ஜனாதிபதியாக இருந்த பொழுது, ஒற்றையாட்சி முறையை மாற்றி இலங்கையை ஓரளவு சமஸ்டி முறையை ஒத்த 'பிராந்தியங்களின் ஒன்றியம்' என மாற்றுவதற்கு எனக் கொண்டுவரப்பட்ட தீர்வுப் பொதியை தமிழ்த் தலைமை ஐ.தே.க, ஜே.வி.பி., ஹெல உருமய போன்ற சிங்கள இனவாத சக்திகளுடன் இணைந்து நடைமுறைப்படுத்த விடாமல் முறியடித்தது.

அந்தத் தீர்வுப் பொதியில் இரண்டு மிக முக்கியமான சரத்துகள் உள்ளடங்கி இருந்தன. ஒன்று, பிராந்திய சபைகளின் அங்கீகாரம் இன்றி அச்சபைகளை மத்திய அரசு தன்னிச்சையாகக் கலைக்க முடியாது என்பது. இரண்டாவது, இப்பொழுது சாதாரண நாடாளுமன்றப் பெரும்பான்மையின் மூலம் மலையக மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள, எந்த நேரமும் இல்லாதொழிக்கக்கூடிய பிரஜாவுரிமையை மாற்ற முடியாதவாறு சட்டத்திலேயே உறுதிப்பாடு வழங்குவது. சிறுபான்மை இனங்களுக்கு மிகவும் நன்மை பயக்கக்கூடிய இந்த இரண்டு விடயங்களையும் உள்ளடக்கிய அந்தத் தீர்வுப் பொதியைத்தான் இன்றைய கூட்டமைப்பு சம்பந்தனும் அங்கம் வகித்த அன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமை சிங்கள இனவாத சக்திகளுடன் சேர்ந்து நடைமுறைப்படுத்த விடாமல் செய்தது.

தொடர்ச்சியாக தமிழ் மக்களின் வாழ்க்கையுடன் தமது சுயலாபம் கருதி விசமத்தனமான விளையாட்டில் ஈடுபட்டுள்ள இந்த தமிழ்த் தலைமைகள்தான், தமிழ் மக்களுக்கு விமோசனம் பெற்றுத் தரப்போவதாகத் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றன. இன்றைய 'நல்லாட்சி' அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினையை நிச்சயமாகத் தீர்த்து வைக்கும் என அடித்துக்கூறிய சம்பந்தன், "அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தமிழ் மக்களுக்கு ஏமாற்றமளிக்கிறது" என இப்பொழுது சுருதியை மாற்றிக் கூறத் தொடங்கியிருக்கிறார்.

இப்படியே அவர்கள் இன்னும் பல தலைமுறைகளுக்கு தமிழ் மக்களை ஏமாற்றி தமது அரசியல் பிழைப்பை நடாத்தப் போகிறார்கள். இந்த நிலைமையில் இனியாவது தமிழ் மக்களில் ஒரு 10 சத வீதத்தினர் தன்னும் தமது பட்டறிவைக் கொண்டு வருங்காலத்தில் ஆழமாகச் சிந்தித்து செயல்படுவார்களா என்பதுதான் இன்றுள்ள கேள்வி.

# ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கத்தரித்து ஒரு சர்வாதிகாரி உருவாகிறார்! இடதுசாரிக் கட்சிகள் கூட்டாக எச்சரிக்கை!!

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பாதங்களுக்கு கீழே இருக்கும் கம்பளத்தை வலிமையுடன் இழுப்பதற்கான உத்தரவை துணிவுடன் விடுத்திருக்கிறார் என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ராஜா கொல்லுரே தெரிவித்திருக்கிறார்.


ஜனவரி 22ஆம் திகதி சோசலிச கூட்டமைப்பின் (Socialist Alliance) ஊடகவியலாளர் மாநாடு பொரளையிலுள்ள டாக்டர் என்.எம்.பெரேரா நிலையத்தில் நடைபெற்றபோது, அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே கொல்லுரே இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் அவர் அங்கு உரையாற்றுகையில்,

''ஜனாதிபதி சிறிசேனவின் அதிகாரத்தின் கீழ் இருக்கின்ற சில அமைச்சுகளை விக்கிரமசிங்க தனது அதிகாரத்தின் கீழ் எடுத்திருக்கும் செயல் நாடாளுமன்ற நெறிமுறைகளை மீறுவதாகவும், ஜனநாயக விரோதமானதாகவும் இருக்கின்றது. தன்னிச்சையாகவும், ஜனநாயக விரோதமாகவும் செய்யக்கூடாத பிரதமரின் இச்செயல்கள் அவரது சர்வாதிகாரப் போக்கையே எடுத்துக் காட்டுகிறது.''

விக்கிரமசிங்க, தனது நண்பர்கள் பிணைமுறி மூலம் பெருந்தொகையான பணத்தைச் சுருட்டுவதற்கு உதவியிருப்பதுடன், அது சம்பந்தமாக 'கோப்' (COPE) விசாரணை செய்து நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்த அறிக்கையை சட்டமா அதிபருக்கு அனுப்பியதன் மூலம் நாடாளுமன்ற நெறிமுறைகளையும் மீறியிருக்கிறார் என கொல்லுரே கடுமையான கண்டனத்தைத் தெரிவித்தார்.

சோசலிச கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார அங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

''ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி




மைத்திரிபால சிறிசேனவின் அதிகாரங்களைப் படிப்படியாக அபகரித்து வருவதுடன், அவரைக் கீழ்மைப்படுத்தும் இயக்கத்தையும் முன்னெடுத்து வருகின்றார்.

பிணைமுறி விவகாரம் பற்றிய 'கோப்' அறிக்கைக்கு சவால் விடும் வகையில் அடிப்படை உரிமைகள் மனு தாக்கல் செய்த வண.தின்னியவெல பாலித தேரோவை லங்கா வைத்தியசாலைகளின் பணிப்பாளர்களில் ஒருவராக அரசாங்கம் நியமித்திருக்கும் செயல், உண்மையில் அவர் ரணில் விக்கிரமசிங்க சார்பாகச் செயல்படுகிறார் என்பதைக் காட்டுவதுடன், ரணில் விக்கிரமசிங்கவும் மனுச் செய்த பிக்கு தனது கேவலமான கைப்பாவை என்பதையும் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

அபிவிருத்தி அதிர்ஸ்ட இலாபச்சீட்டின் விலையை 30 ரூபாவிலிருந்து 20 ரூபாவாக ஜனாதிபதி குறைக்க, அதை மீண்டும் 30 ரூபாவுக்கே கூட்டியதின் மூலம் நிதியமைச்சர் ரவி கருணநாயக்க ஜனாதிபதியின் தீர்மானங்களுக்கு எதிராகச் செயற்படுகின்றார்'' என வாசுதேவ சாடினார்.

சோசலிசக் கூட்டமைப்பின் இன்னொரு பங்காளிக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண கருத்துத் தெரிவிக்கையில்,

''அரச வங்கிகளுக்கு மேலாக கூடுதலான தனியார் வங்கிகளுக்கு இடமளிப்பதின் மூலம் நாடு மிக விரைவில் பெரும் பொருளாதார நெருக்கடி ஒன்றுக்கு முகம் கொடுக்கப் போகிறது. அமெரிக்காவில் 2005 – 2009 காலகட்டத்தில் தனியார் வங்கிகள் சட்டபூர்வமற்ற முறையில் செயல்பட்டதால், இதேவிதமாக நெருக்கடியை எதிர்நோக்கி வீழ்ச்சியைச் சந்தித்தன'' எனக் கூறினார்.

**- கொழும்பிலிருந்து பி.வி**

## ஐ.தே.க. உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெற விடாமல் தடுத்து வருகிறது!

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதி எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கையில் கையொப்பமிடாமல் தவிர்ப்பதின் மூலம், அக்கட்சி உள்ளூராட்சி தேர்களை நடைபெற விடாமல் திட்டமிட்ட முறையில் தந்திரமாகத் தடுத்து வருகிறது என, சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்கள் இயக்கத்தின் (CaFEE) நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கூன் குற்றம் சாட்டியிருக்கிறார்.

தேர்தலில் வெற்றிபெறமாட்டோம் என்ற பயம் காரணமாகவே இந்தவிதமான தந்திரோபாயத்தை ஐ.தே.க. பின்பற்றுகிறது எனவும் அவர் குறிப்பிட்டார். இதன் காரணமாக இலங்கையின் வரலாற்றில் முதல் தடவையாக உள்ளூராட்சித் தேர்தல்கள் ஒன்றரை வருடங்களாகத் தாமதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் அவர் கூறுகையில், ''யுத்த காலத்திலும், ஏனைய இடையூறுகளின் போதும்கூட தேர்தல்கள் நடாத்தப்பட்டுள்ளன. ஆனால் இப்போதைய இழுத்தடிப்பு தந்திரமான எண்ணத்துடன் மேற்கொள்ளப்படுகிறது'' என்று தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தல்களை நடாத்தாது இழுத்தடிப்பதன் மூலம், அரசாங்கம் நல்லாட்சிக்கான தத்துவங்களையும், மக்களுடைய ஆணையையும் அப்பட்டமாக மீறுகின்றது எனவும் கீர்த்தி தென்னக்கூன் குறிப்பிட்டுள்ளார்.